වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுபகை அறிக்கை

Annual Performance Report







2021

නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන, පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යාංශය

திறன்கள் அபிவிருத்தி இ தொழிற்கல்வி இ ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

State Minisry of Skills Developmwnt, Vocational Education, Research and Innovation

2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

செலவினத் தலைப்பு இல – 421

உள்ளடக்கம்

	பக்க இல.
அத்தியாயம் 01 - நிறுவகத்தின் விபரங்கள்/நிறைவேற்றுனர் சுருக்கவுரை	01
அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு	15
அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	31
அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்	48
அத்தியாயம் 05 - நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கையடையும் செயலாற்றுகை	49
அத்தியாயம் 06 - மனித வள விபரம்	53
அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை	57

அத்தியாயம் 01
நிறுவகத்தின் விபரங்கள் / நிறைவேற்றுனர் சுருக்கவுரை

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சானது, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின், 2020.08.09 எனும் திகதியினையும் 2187/27 எனும் இலக்கத்தினையும் கொண்ட அதி விசேடவர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவுற செயற்படுகின்றது

1.1. அறிமுகவுரை

இலங்கையின் பொருளாதாரத்திற்கு நேரடிப் பங்களிப்பை வழங்கும் கைத்தொழில்கள் மற்றும் சேவைத் துறைகளின் செயற்றிறனில் திறன் மிகு பணியாளர்கள் உயர் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். எனவே தொழில் பயிற்சித் துறையில் எதிர்காலத்தில் ஏற்படும் விருத்தியானது, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பினை வழங்கும் ஒன்றாக இருக்கும்.துரித கதியில் நவீனமயமாக்கப்பட்டு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் துறைக்கு தேவையான தொழிலாளர் தேவைப்பாடுகளினை பூர்த்தி செய்வதற்காக, திறமையான மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வைத்திருப்பவர்களை உருவாக்கும் அபிலாஷையுடன், 2021 - 2030 ஆம் ஆண்டினை ‘‘திறன் புத்தாண்டு’’ என்று அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பரிந்துரைத்துள்ளார். எனவே, அரச மற்றும் தனியார் துறை தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் தொழிலாளர் சந்தைக்கு ஆண்டுதோறும் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்க தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வேலைவாய்ப்பில் உள்ள திறமையற்ற பணியாளர்களை 10% இனால் குறைப்பதற்குமான முயற்சியில் இந்த இராஜாங்க அமைச்சு ஈடுபட்டுள்ளது.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படையினை திறமையான பணியாளர்கள், ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் மூலம் ஏற்படுத்துவதற்கு முயலும் ,அதே வேளையில் ‘‘நாட்டினை கட்டியெழுப்புவதற்கான தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு’’ இணங்க, திறன் கல்வி தொடர்பான திட்டங்கள் மற்றும் புதுக் கண்டுபிடிப்புக்களுக்கு ஆதரவான பின்னணியுடன் 2021 ஆண்டுக்கான செயற்திட்டம் நடைமுறையாக்கம் செய்யப்பட்டது. எவ்வாறாயினும், தற்போது எதிர்கொள்ளப்படும் சுகாதார பிரச்சினைகளின் காரணமாக நிலைய அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகளினை நீண்ட காலமாக முன்னெடுக்க இயலாது இருத்தலானது தொழிற்கல்வி நடவடிக்கைகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் சாதிக்க இயலாத நிலை ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் கீழ் உள்ள பயிற்சி நிறுவனங்களாவன, 159,059 மாணவர்களை உள்வாங்குவதற்கு எதிர்பார்த்து இருந்த போதிலும்,. கோவிட் - 19 தொற்றுநோயின் காரணமாக, 2021 டிசம்பர் மாத இறுதியில் மாணவர் சேர்க்கை 70,444 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

தொற்றுநோய்களின் மத்தியிலும் கூட, தொழிற்கல்வித் துறையும் தன் கடமைகளைத் தொடர பயனுள்ள மாற்று வழிகளைப் பின்பற்றுகிறது. ஒவ்வொரு பயிற்சி நிறுவனமும் நிகழ்நிலை மூலம் பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்வதோடு, பயிற்சி வகுப்புகளின் கோட்பாடு சார்ந்த கருத்துகளாவன, நிகழ நிலை அடிப்படையிலான கற்பித்தல் மூலம் மேற்கொள்ளப்படும். இந்த செயல்முறையை எளிதாக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நிகழ் நிலை அடிப்படையிலான கற்பித்தல் மற்றும் பிற வசதிகளை மேம்படுத்துமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (Online Flat form) அத்துடன் இலங்கைப் சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்கல்வி தொழினுட்பப் பல்கலைக்கழகம் ஆகியவற்றினை சார்ந்த மாணவர்களுக்கு மக்கள் வங்கியின் ஊடாக

மடிக்கணினிகளை கொள்வனவு செய்வதற்கான கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. கற்கை நெறிகளின் உள்ளடக்கங்களினை மின்னணுவியல் மற்றும் அச்சிடப்பட்ட ஊடகங்களின் ஊடாக தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தொலைக்காட்சி அலைவரிசைகளில் கற்பித்தல் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் முன்னெடுக்கப்படுதலானது இதன் ஒரு விசேட அம்சமாக கருதப்படுகிறது. கல்வி செயற்பாட்டுகளுடன் மேலதிகமாக, அதே தொழினுட்பமானது மதிப்பீட்டாளர்கள் மற்றும் ஆய்வாளர்களைப் பயிற்றுவிப்பதற்கும் பின்பற்றப்பட்டது.

பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளும் மாணவர்களின் தொகையை இரட்டிப்பாக்குவதற்கும் இளைஞர்களை அவர்களின் பள்ளிக் கல்விக்குப் பின் நேரடியாக தொழிற்பயிற்சிக்கு வழிநடத்துவதற்கும் சமுதாயத்தின் ஒவ்வொரு குழுவும் அறியும் படி செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ஒவ்வொரு மாவட்ட நிர்வாகத்தினதும் ஆதரவுடன் தொழில் வழிகாட்டல் தொடர்பிலான நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இளைஞர்கள், பயிற்சி பெறாத வல்லுநர்கள் மற்றும் தங்கள் சொந்தத் துறையில் அறிவைப் புதுப்பிக்க விரும்பும் பணியாளர்கள் என வேறுபட்ட குழுக்களுக்கு அவரவர்களது துறைகளில் தொழிற்கல்வி வசதிகளை வழங்குவதற்கு ஏற்ற வகையில் தொழிற்பயிற்சி வலையமைப்பு திருத்தியமைக்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, முன் கற்றல் அங்கீகாரம் (RPL), தொழிலதிபர்கள் மூலம் பயிற்சி மற்றும் நெகிழ்வான முறைகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் உத்தியாக, தொழிற்துறைகளுடன் இணைந்து பயிற்சி வகுப்புகளை நடத்தவும், அவற்றிற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் ஸ்திரப்படுத்துவதற்கும், தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் நிலையான அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கும் புதுக்கண்டுபிடிப்புக்களை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் பங்களிப்பானது இலங்கைக்கு இன்றியமையாததாகும். இந்நிலையை உணர்ந்து, அதற்காக ஒதுக்கப்படும் நிதியை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இராஜாங்க அமைச்சு செய்துள்ளது.

இதற்கமைவுற, மீளாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில், ஆராய்ச்சி மற்றும் புத்தாக துறையில், இராஜாங்க அமைச்சானது, காலத்திற்கு ஏற்ற முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சியை பொருத்தமான முறைகளின்படி தேர்ந்தெடுத்து, அவற்றுக்கு போதுமான ஏற்பாடுகளை வழங்குதல், பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவதில் படைப்பாற்றல் மற்றும் புதுகண்டுபிடிப்புகளின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வை விரிவுபடுத்துவதற்காக வேறுபட்ட விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை நடவடிக்கைகளை முன்னெடுத்தல்மற்றும் புத்தாகங்களினை ஊக்குவிப்பதற்கும் வணிகமயமாக்கலை விரிவுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மற்றும் கோவிட் தொற்றுநோய்க்கு முகங்கொடுக்கும் இக்காலகட்டத்தின் போதும் பல்வேறு நாடுகளுடன் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளினை முன்னெடுக்க கூடியதாக இருந்தது.

விஞ்ஞான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக நவம்பர் 10 ஆம் தேதி வரும் உலக அறிவியல் தினத்துடன் இணைந்ததாய் தேசிய அறிவியல் தினத்தை நினைவுகூரும் வகையில் அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் ஆதரவின் கீழ் அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் மற்றும் (NIM) ‘‘கனவுகளுக்கு உயிர் கொடுக்கும் நிகழ்காலம்’’ என்ற கருப்பொருளின் கீழ் தேசிய புத்தாக்க இயக்கம் தொடங்கப்பட்டது.

மேலும், சமூகம், விஞ்ஞானமும் தொழினுட்பமும், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளில் புத்தாகங்களினை பற்றிய சிறந்த புரிதலை ஏற்படுத்தவும்

இவை நாட்டின் பொருளாதாரத்தில் எந்தளவிற்கு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதனை ஆராய்வதற்கும் 2019 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சட்டத்திற்கு அமைவுற தேசிய புத்தாக முகவராண்மையானது (NIA) நிறுவப்பட்டது.

"நாட்டினை கட்டி எழுப்புவதற்கான சுபீட்சதின் நோக்கு" என்ற கொள்கை கட்டமைப்பிற்குள், அரசாங்கத்தின் "அரசாங்க கரிம உரத் திட்டத்திற்கு" இணங்க, உயிரியல் சவ்வு உயிரியல் பசளை திட்டம் (BFBF) தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக 2021 ஆம் ஆண்டில் யால போகத்தின் போது குருநாகல், அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் 55,000 ஏக்கர்களில் உயிரியல் சவ்வு உயிரியல் பசளை பிரயோகிக்கப்பட்டது.

1.2. நோக்கம் மற்றும் செயற்பணி

நோக்கு

உயர் திறனுடைய ஆராய்ச்சியினை சார்ந்த புத்தாக்க சமூகம்

செயற்பணி

அறிவாற்றலுடன் கூடிய ஒரு திறமை மிக்க சமுதாயத்தை உருவாக்குவதன் மூலமும் தொழில் திறன்கள் மற்றும் திறமைகள் அதுபோன்று தேசிய மட்டத்தில் புதுக் கண்டுபிடிப்புக்களுக்குகந்த சூழல் அமைப்பு என்பனவற்றின் மூலமும் பிராந்திய ரீதியில் ஒரு புதுக்கண்டுபிடிப்பு மையத்திற்கான அடித்தளத்தை உருவாக்கல்

1.3. பிரதான செயற்பாடுகள்

1 கல்வித் தகுதிகளைப் பொருட்படுத்தாது தொழினுட்பம் மற்றும் உயர் தொழிற்கல்வியை வழங்குதல்.

2 அனைத்து தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் ஒரு முறையான மதிப்பீட்டிற்கு உட்படுத்திய பின்னர் தேவைப்பாட்டிற்கு ஏற்ப நிறுவனங்களின் பௌதீக மற்றும் மற்றும் பாடத்திட்ட அமைப்புக்களில் மாற்றங்களினை ஏற்படுத்துவதுடன் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் "One TVET" கருதுகோளின் கீழ் கொண்டு வருதல்.

3 சிலோன் ஜெர்மன் தொழினுட்ப பயிற்சி நிறுவனத்தை விரிவுபடுத்துதல்.

4 தேசிய தொழிற்கல்வித் தகுதியின் (NVQ) தற்போதைய 7 எனும் நிலையினை 10 ஆக உயர்த்தல்.

5 முதுகலை நிலை வரை தொழிற்கல்வியைத் தொடர கல்வி வாய்ப்புகளை வழங்குதல்.

6 தகவல் தொழினுட்பம், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகள் உள்ளிட்ட மென் திறன்களை ஒருங்கிணைக்க கூடியதாய் தொழிற்கல்வி தொடர்பான பாடத்திட்டங்களை திருத்தல்.

7 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை சந்தைகளை மையமாகக் கொண்டு தொழில் கல்வியை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

8 தகவல் தொழினுட்ப (IT) தொழில்முயலுமையினை தாபித்தல்.

9 நகர் பல்கலைக்கழகங்களை நிறுவுதல்.

10 நடமாடும் தொழில் மற்றும் தொழினுட்ப கல்வி சேவைகளை நிறுவுதல்.

11 இணையத்தின் பொருட்கள், செயற்கை நுண்ணறிவு, உயிரித் தொழினுட்பம், மனித எந்திரவியல், செயற்கை யதார்த்தம், கிளவுட் கணினி முறை, நனோ தொழினுட்பம் மற்றும் முப்பரிமாண அச்சிடுகை ஆகியவற்றைப் உச்ச அளவில் பயன்படுத்துவதன் மூலம் இலங்கையை ஒரு புத்தாக்க மையமாக நிறுவுதல்.

12 ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைகளை வழங்குவதற்கும், அவர்களின் ஆராய்ச்சி வடிவமைப்புகளுக்குரிய உரிமையைப் பெறுவதற்குமான முறைமையினை வினைத்திறன் கொண்டதாக்குதல்.

13 சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டிணைவதற்கு உள்ளூர் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்.


14 ஆராய்ச்சிக்கு பங்களிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குதல்.

15 புதுக்கண்டு பிடிப்புக்களினை சார்ந்த உற்பத்தி பொருட்களினை உள்நாட்டு வர்த்தக நாமத்தில் உற்பத்தி செய்யத் தேவையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அறிமுகப்படுத்தல்.


16 கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை முதலீட்டாளர்கள் மற்றும் தொடர்புடைய பயனர்களுக்கு தெரியப்படுத்த ஒரு திறமையான பொறிமுறையை உருவாக்குதல்.

1.4. அமைப்பாண்மை கட்டமைப்பு


நிர்வாகப் பிரிவு




ஏற்பாட்டியல் பிரிவு


செயலாளர்
மேலதிக செயலாளர்
(ஏற்பாட்டியல்)
பணிப்பாளர்
(ஏற்பாட்டியல்)
பணிப்பாளர்
(உட்கட்டமைப்பு)
உதவி
செயலாளர்
(பெறுகை)
உதவி
செயலாளர்
(ஏற்பாட்டியல்)
உதவி
பணிப்பாளர்
(உட்கட்டமைப்பு)
தொழினுட்பவியல்
அலுவலர்கள் (- -)
தொழினுட்பவியல்
உதவியாளர்கள் (- -)
அபிவிருத்தி அலுவலர்கள் (- -)
மற்றும்
முகாமைத்துவ சேவை
அலுவலர்கள் (- -)
கட்புல
நிழற்பதிவுப்பெட்டி
சாரதிகள்
(- -)
பங்களா
காவலர்கள் (02)
தொழினுட்ப
உதவியாளர்கள் (03)
அலுவலக
உதவியாளர்கள் (- -)
உதவி பங்களா
காவலர்கள் (02)
படப்பிடிப்பாளர்
உதவி
படப்பிடிப்பாளர்


தொழிற்பயிற்சி பிரிவு


செயலாளர்
மேலதிக செயலாளர்
(தொழிற்பயிற்சி)
பணிப்பாளர்
(தொழிற்பயிற்சி)
பணிப்பாளர்
(திறன்கள் அபிவிருத்தி)
பணிப்பாளர்
(தொழில் வழிகாட்டுகை)
பிரதி பணிப்பாளர் /
உதிவி பணிப்பாளர்
(தொழிற்பயிற்சி)
பிரதி பணிப்பாளர் /
உதிவி பணிப்பாளர
(திறன்கள் அபிவிருத்தி)
பிரதி பணிப்பாளர் /
உதிவி பணிப்பாளர்
(தொழில் வழிகாட்டுகை)
அபிவிருத்தி அலுவலர்கள் (- -)
திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள் (55)
மற்றும்
முகாமைத்துவ சேவை அலுவலர்கள் (- -)
அலுவலக உதவியாளர்கள் (- -)


அபிவிருத்தி மற்றும் புத்தாக்க பிரிவு




ஆராய்ச்சி பிரிவு


செயலாளர்
பணிப்பாளர் நாயகம்
(ஆராய்ச்சி)
பணிப்பாளர்
(ஆராய்ச்சி)
உதவி பணிப்பாளர்
(ஆராய்ச்சி)
அபிவிருத்தி
அலுவலர்கள் (- -)
மற்றும்
முகாமைத்துவ சேவை
அலுவலர்கள் (- -)
அலுவலக
உதவியாளர்கள் (- -)


கணக்கியல் பிரிவு


செயலாளர்
பிரதான நிதியியல் அலுவலர்
பிரதான கணக்காளர் - I
பிரதான கணக்காளர் - II
கணக்காளர் - I
கணக்காளர் - II
கணக்காளர் - III
கணக்காளர் - IV
அபிவிருத்தி
அலுவலர்கள் (- -)
மற்றும்
முகாமைத்துவ சேவை
அலுவலர்கள் (- -)
அலுவலக
உதவியாளர்கள் (- -)


திட்டமிடல் பிரிவு


செயலாளர்
பணிப்பாளர் நாயகம் (தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி)
பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்)
பணிப்பாளர் (தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி)
பணிப்பாளர் - I (ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்)
பணிப்பாளர் - II (ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்)
பிரதி பணிப்பாளர் / உதிவி பணிப்பாளர்
பிரதி பணிப்பாளர் / உதிவி பணிப்பாளர்
பிரதி பணிப்பாளர் / உதிவி பணிப்பாளர்
அபிவிருத்தி அலுவலர்கள் (- -) மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்கள் (- -)
அபிவிருத்தி அலுவலர்கள் (- -) மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்கள் (- -)
அலுவலக உதவியாளர்கள் (- -)
அலுவலக உதவியாளர்கள் (- -)

உள்ளக கணக்காய்வு பிரிவு



<u>கருத்திட்ட பிரிவு</u>



1.5 இராஜாங்க அமைச்சின் கீழ் அடங்கும் திணைக்களங்கள்

- தொழினுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் (DTET)

1.6 இராஜாங்க அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனங்கள்

- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு (TVEC)
- இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA)
- தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA)
- சிலோன் ஜேர்மன் தொழில் நுட்பவியல் பயிற்சி நிலையம் (CGTTI)
- வாழ்க்கைத் தொழினுட்பவியல் பல்கலைக்கழகம் (UNIVOTEC)
- இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (OUSL)
- தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் (NIBM)
- வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை (NSBM)
- இலங்கை அச்சிடல் நிறுவகம் (SLIOP)
- நவீன தொழில்வியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் (ACCIMT)
- தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)
- தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் (NIFS)
- தேசிய ஆராய்ச்சி மன்றம் (NRC)
- தேசிய விஞ்ஞான மன்றம் (NSF)
- இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)
- இலங்கை கோள்மண்டலம்

1.7. வெளிநாடுகளில் இருந்து நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	அமுல்படுத்துகை செய்யும் முகவர் நிலையம்	கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி (மில்.)	கருத்திட்டத்தின் கால வரையறை
GTZ - இலங்கை தொழில் பயிற்சி கருத்திட்டம்	ஜேர்மன் அரசாங்கம்	யூரோ 7 மில்லியன்	ஜூலை 2019 - ஜூன் 2022
USAID – இலங்கை இளைஞர் தொழில் வாய்ப்பும் வியாபாரம் தொடங்கப்படுவதற்குமான கருத்திட்டம் (You Lead)	ஐக்கிய அமெரிக்க அரசு	18 மில்லியன் டொலர்	ஜூன் 02, 2017 - மே 31 2024

அத்தியாயம் 02
முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1. 2021 ஆம் ஆண்டின் அமைச்சின் அடைவுகள்

2.1.1 திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் கல்வி துறை

கௌரவ பிரதமர் அவர்களால், 2021 ஆம் ஆண்டுக்கான நிதி அமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக ரூ.3000 மில்லியன் பணத்தொகையானது, மேலதிக ஒதுக்கீடாக திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டதன் நோக்கு, இளைஞர்களை தொழில் பயிற்சிக்கு ஈர்க்கும் வகையில், "One TVET" என்ற கருதுகோளின் கீழ் தொழிற்பயிற்சி நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு ஆகும். பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், பயிற்சியாளர்களுக்கு பயிற்சி, தொழில்நுட்ப உபகரணங்களை வாங்குதல், கட்டிடங்களை உடனடியாக பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு இந்த ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2020 ஆம் ஆண்டில், அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களினை சார்ந்த 80 பயிற்சி நிலையங்களில் வள மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. தகவல்களை பகுப்பாய்வு செய்ததன் மூலம், தற்போதுள்ள மையங்களில் பற்றாக்குறையின் எண்ணிக்கை கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல், கிராமப்புற மக்களிடையே தொழில் பயிற்சிக்கான விளம்பரம் குறைவாக இருப்பதால், கிராமப்புற தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களின் சேர்க்கை குறைந்துள்ளதும் தெரியவந்துள்ளது. மேற்படி வரவு செலவு திட்ட முன்மொழிவுக்கு உட்பட்டு அந்த தேவைகள் மற்றும் பற்றாக்குறைகளை பூர்த்தி செய்வதற்காக அமைச்சு பின்வரும் விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

- தேவை குறைவாக உள்ள கற்கைகளுக்கு பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்ட "நிபுனதா சிசு சவிய" என்ற உதவித்தொகை திட்டத்தின் கீழ் 05 நிறுவனங்களில் இருந்து 26,737 பயிற்சியாளர்கள் அந்தந்த அளவுகோல்களைப் பின்பற்றி பெறுநர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மற்ற நிறுவனங்களில் பெறுநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் ரூபாய் மற்ற நிறுவனங்களில் பெறுநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. தேசிய வரவு செலவுத் திணைக்களம் ரூபாய் 360 மில்லியனை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்துள்ளது என்பதுடன் அதில் ரூபாய் 142.37 மில்லியனை பயிற்சி நிறுவனங்களுக்கு இடையே இதுவையில் பகிர்ந்துள்ளது.

- பயிற்றுவிப்பாளர்களின் செயல்திறன் மற்றும் கல்விப் பணியாளர்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான அளவுகோல்களை பரிந்துரைக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. இரண்டு நிலைகளில் கொடுப்பனவினை வழங்குவதற்கான அனுமதி மற்றும் ஒப்புதலினை பெறுவதற்காக இவ்விடயம் தொடர்பிலான பரிந்துரைகளாவன சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிகழ்நிலை முறையிலான கற்பித்தல் குறித்த விழிப்புணர்வை வழங்க பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி அமர்வுகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- அமைச்சின் முக்கிய நோக்கங்களில் ஒன்று மாணவர்களின் சேர்க்கையை அதிகரிப்பதாகும். அந்தவகையில், இலங்கையின் தொழினுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகியவை கற்பித்தல் திறனை அதிகரிப்பதற்காக மேலதிகமாக ஆட சேர்ப்பு செய்யப்படும் வெளி மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு படிகளினை வழங்குவதற்கான அவசியங்களை அடையாளம் கண்டுள்ளன. புதிய ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இளைஞர்களை தொழில் பயிற்சிக்கு ஈர்க்கும் வகையில், தொழினுட்பக் கல்லூரிகள்/ மாவட்ட தொழில் பயிற்சி நிலையங்களின் கட்டிடங்களின் தோற்றத்தை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் "தொழினுட்ப உதான" திட்டத்தின் கீழ் தனித்துவமான கட்டடக்கலைத் திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் 06 தொழிற்பயிற்சி நிலையங்கள் மேம்படுத்தப்படும். ஒப்பந்தம் வழங்கப்பட்டு ஹோமாகம, குருநாகல், கண்டி மற்றும் பதுளை தொழினுட்பக் கல்லூரிகளில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாத்தறை மற்றும் மருதானை தொழினுட்பக் கல்லூரிகளின் சிவில் நிர்மாணப் பணிகள் இலங்கை கடற்படையினரால் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், புணரமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

- தொழில் சந்தையில் அதிக தேவை உள்ள கற்கைகளுக்கு மாணவர்களின் சேர்க்கையை அதிகரிப்பதற்காக, அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது வகுப்பறைகள், பணிமனைகள், ஆய்வகங்கள், உணவகங்கள், ஓய்வு அறைகள், உடை மாற்றும் அறைகள், சுகாதாரப் பிரிவுகள் மற்றும் மாணவர்கள்/ஆசிரியர் குடியிருப்புகள் ஆகியவற்றின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு ரூபாய் 481.80 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சர்வதேச தரத்தில் தொழிற்கல்வித் துறையில் உள்ள மாணவர்களுக்கு தொழினுட்ப அறிவை வழங்குவதைக் கருத்தில் கொண்டு, பட்டறைகள் மற்றும் ஆய்வகங்களைச் சித்தப்படுத்துவதற்கு பயிற்சி உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. ரூபாய் 218.0 மில்லியன் நான்கு நிறுவனங்களில் உபகரணங்கள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னுரிமையின்படி பட்டியலிடப்பட்ட உபகரணங்களின் தேவைப்பாடானது, வெளிநாட்டு மானியங்கள் மூலம் ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்ய நிதி அமைச்சிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

- புதிய பிராந்திய நிலையங்களை ஸ்தாபிப்பதற்காக பெறப்பட்ட முன்மொழிவுகள் பரிசீலனையில் உள்ளன மற்றும் இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகார சபை இது குறித்து சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

- நடமாடும் தொழிற்பயிற்சி மற்றும் ஊக்குவிப்பு பிரிவுகளை நிறுவுவதன் மூலம் தொழிற்கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு நடமாடும் ஆய்வக பேருந்துகள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- முறையே மார்ச் மற்றும் ஜூலை மாத விளைவுகள். விழிப்புணர்வை வழங்குதல் மற்றும் திறன் கல்வியை மேம்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, "திறன்கள் ஸ்ரீலங்கா" வின் சிங்கள மொழி வெளியீடானது, "தினமின"

பத்திரிகையுடன் தமிழ் மொழி வெளியீடானது "தினகரன்" பத்திரிகையுடன் மேலதிகமாக வெளியிடப்பட்டுள்ளன. இதனை விட தொலைக்காட்சி மற்றும் வானொலியில் பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவும் ஒலி பரப்பவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திறன் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம்

- 2021 ஆம் ஆண்டிற்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்குவதற்கான விழா 2021 ஆம் ஆண்டு மார்ச் 02 ஆம் தேதி பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்தில் "திறன்கள் இலங்கை" என்ற தொனிப்பொருளின் கீழ் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கௌரவ. பிரதமர், கௌரவ. கல்வி அமைச்சர் கௌரவ. இராஜாங்க அமைச்சர் மற்றும் வேறு சில அமைச்சர்கள் "Skills Sri Lanka" லோகோவை அறிமுகப்படுத்தினர், புதிய பயிற்சி வாய்ப்புகள் (Pizza Hut/ Orange/ Nursing School), மாணவர்களுக்கான உதவித்தொகை வழங்குதல், நடமாடும் பயிற்சி அலகுகளை அறிமுகப்படுத்துதல் என்பனவற்றில் தனியார் துறையுடன் இணைந்து செயல்படுதல் மற்றும் "Skills Sri Lanka" இன் முதல் பதிப்பை அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமர் அவர்களுக்கு செய்திமடல் பிரதமர் வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் இதன் போது இடம்பெற்றன.

- உலக இளைஞர் திறன் தினம் 2021
  இந்த ஆண்டு உலக இளைஞர் திறன்கள் தினத்தின் நினைவேந்தல் அதிமேதகு ஜனாதிபதி கௌரவ. பிரதமர், கௌரவ. இராஜாங்க அமைச்சர், அதிமேதகு ஜனாதிபதியின் செயலாளர், கௌரவ. பிரதமரின் செயலாளர் மற்றும் தனியார் துறை சார்ந்த வள ஆளணியினர் ஆகியோர் முன்னிலையில் நகரப் பல்கலைக்கழகங்களை நிறுவுதல் என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெற்றது.

- மாணவர்கள் வீட்டிலிருந்து பாடங்களைப் பின்பற்றுவதற்கு வசதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்கல்வி நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படுகின்றன. இது கீழ்கண்டவாறு தொலைதூரக் கற்றல் முறையில் ஏஞ சான்றிதழைப் பெற முடியும்.

  - சிரச அலைவரிசையில் 03நிகழ்ச்சித்திட்டங்கள்
  - தெரன அலைவரிசையில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள்

- "13 ஆண்டு தொடர் கல்வித் திட்டத்தின்" நான்காவது படி 382 பாடசாலைகளில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 11,985 மாணவர்களை தொழிற்கல்விக்கு கல்வி அமைச்சு வழியமைத்துள்ளது.

- தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு SEPI கடன் திட்டத்தின் கீழ் ரூ. 10.0 மில்லியன் மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் 31.12.2021 இல் உள்ளவாறு நோக்கின் மொத்த கிரய செலவினம் ரூ. 5.85 மில்லியன் ஆகும்.

- ஜனாதிபதி செயலணியுடன் இணைந்து குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் உள்ள 100,000 பயனாளிகளுக்கு தேசிய பயிலுனர் மற்றும் தொழில்துறை பயிற்சி அதிகாரசபை (NAITA) மூலம் பல்நோக்கு அபிவிருத்தி பணிக்குழு பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். இதன் கீழ், 34,000 பயனாளிகளுக்கு ஏற்கனவே பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

- “இலங்கையில் GIZ தொழிற்பயிற்சி” திட்டத்தின் கீழ் பெறப்பட்ட 7 யூரோ மில்லியன் நிதியின் கீழ் தொழில் பயிற்சி திட்டங்களை செயல்படுத்துதல் / மேம்படுத்துதலானது நடைபெற்று வருகின்றது. கிளிநொச்சியில் உள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் (SLGTI), மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு (NVTI) பயிற்சிப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்க இந்த மானியம் பயன்படுத்தப்பட்டுள்ளது.மாத்தறை பிராந்திய மையம் நிறுவப்படவுள்ள காணியை இந்த அமைச்சுக்கு கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஜேர்மனி அரசாங்கத்தின் கடன் வழங்கும் நிறுவனமான KEW உடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஜேர்மனி அரசாங்கத்திடமிருந்து யூரோ 15.7 மில்லியன் கடன் பெறுவதற்கான ஒப்பந்தங்களைச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்கான (OUSL) புதிய கட்டிடத்தை மட்டக்குளியில் நிர்மாணிப்பதற்கான சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. கருத் திட்ட நடவடிக்கைகள் 2022 இல் தொடங்கப்படும்.

- அவுஸ்திரேலியா மானிய உதவியின் கீழ் செயல்படும் S4IG திட்டத்தின் இரண்டாவது படியினை முன்னெடுப்பதற்காக, அவுஸ்திரேலிய டொலர் 12 மில்லியனுக்கான ஒப்புதலைப் பெறுவதற்குத் தேவையான பரிந்துரைகள் வெளிவளத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- YOULEAD திட்டத்தின் கால வரையறைகளினை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்க தேவையான பரிந்துரைகளை வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் USD 6.0 மில்லியன் ஆனது கூடுதல் மானியமாக தொழில் பயிற்சித் துறைக்கு மாற்றப்படும்

- தொழில் வழிகாட்டுதல்

    - பாடசாலை கல்விக்குப் பிறகு வேலை சந்தையில் கௌரவமான மற்றும் திருப்திகரமான வேலையைக் கண்டறிவதற்கான சரியான வழிகாட்டுதலை வழங்கும் நோக்கத்துடன் “Find yourself YOU CAN Sri Lanka” என்பதன் கீழ் தொடங்கப்பட்ட தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித் தொடர். இந்த முயற்சியின் கீழ் பின்வரும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

        - செப்டம்பர் 27, 29 மற்றும் 2021.10.21 ஆகிய திகதிகளில் Eye அலைவரிசை மூலம் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளை நடத்தல்.
        - சவால்களில் வெற்றிபெற்ற தொழில்முனைவோரின் பங்களிப்போடு, இளைஞர்கள் தங்கள் திறமைகளை அடையாளம் கண்டு, ஒரு சிறந்த நிபுணத்துவம் பெற்ற தொழில் சார்பியலாளராக வருவதற்கு வழிவகுக்கும் முகமாக, நிகழ்நிலை அமைப்பின் மூலம் செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 03 வரை ஒவ்வொரு நாளும் காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளை நடத்தல்
        - திறன் அபிவிருத்தி உதவியாளர்களின் வள பங்களிப்புடன் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய தொழில் வழிகாட்டல் அமர்வுகளை நடாத்துதல்.

    - “YOU CAN Sri Lanka” நிகழ்ச்சியினை தொடங்குவதற்கான அதிகாரப்பூர்வ விழாவானது, கௌரவ. கல்வி அமைச்சர் அவர்களின் தலைமைத்துவத்தின்

கீழ் 2021 செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில்

- இளைஞர்கள் நேரடியாக தொழில் வழிகாட்டி தீர்வுகளை கண்டறிய www.youthjobs.lk என்ற இணையதளமானது தொடங்கப்படல்.
- நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள அனாதை இல்லத்தினை சார்ந்த குழந்தைகளுக்கு தொழிற்கல்வி வழங்குவதற்காக, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சிற்கும் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, முன்பள்ளி மற்றும் தொடக்கக் கல்வி, பாடசாலை உள்கட்டமைப்பு மற்றும் பாடசாலை சேவைகள் இராஜாங்க அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- NCGCC இற்கு தொழில் வழிகாட்டுதலைத் தேடி வரும் அனைத்து நபர்களுக்கும் தனிப்பட்ட தொழில் வழிகாட்டுதல் அமர்வுகளை நடத்துதல். தொலைபேசி எண் 011-2081808 மூலம் அவர்களுக்கு தொழில்சார் தகவல் மற்றும் தொழில் வழிகாட்டுதல்களை வழங்கல்.

- பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள திறன் அபிவிருத்தி உதவியாளர்கள் ஊடாக பல்கலைக்கழக கல்விக்கு தகுதியற்ற அனைத்து மாணவர்களுக்கும் தனிப்பட்ட தொழில் வழிகாட்டல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தரவுகளாவன பரீட்சைகள் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

- அமைச்சுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய பட்டதாரிகளை பிரதேச செயலகங்களுடன் இணைப்பதற்கு முன்னர், நிலையத்திலேயே 5 நாள் பயிற்சித் திட்டத்தை நடாத்துவதன் மூலம் ஆரம்ப தொழில் வழிகாட்டல் அறிவை வழங்குதல்.

தேசிய தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையத்தால் நடத்தப்படும் நிகழ்ச்சிகள்
2021 ஜனவரி 31 முதல் செப்டம்பர் 30 வரையில்

தொ. இல	திகதி	இடம்	நிகழ்ச்சித்திட்டம்	பங்கு பெறுனர்களின் எண்ணிக்கை
01.	2021.01.11	டங்கரின் விடுதி - களுத்துறை	"கற்றல் நோக்கத்திற்கான தொழில் வழி" ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பயிற்சித் திட்டம் – கல்வி அமைச்சு	90
02.	2021.03.15	பாதுகாப்பு சேவைகள் கல்லூரி - கொழும்பு	மேல்மாகாணத்தில் 15.03.21 அன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன மாணவர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி - ஆண்டு 11 - ஆண்டு 5	 340 85
03.	2021.04.28.	தேசிய தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையம்	புதிதாக பணியமர்த்தப்பட்ட அபிவிருத்தி அதிகாரிகளுக்கு அமைச்சின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	12
04.	2021.05.10	பாதுகாப்பு சேவைகள் கல்லூரி - கொழும்பு	கல்விப்பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு, க.பொ.த உயர்தர பரீட்சைக்குரிய பாடங்களினை	320

			அம்மாணவர்கள் தெரிவு செய்வதற்கு வழிகாட்டும் பொருட்டு அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நிகழ்நிலை அடிப்படையில் நிகழ்ச்சிதிட்டங்களை முன்னெடுத்தல்	
05.	2021.05.25	பாதுகாப்பு சேவைகள் கல்லூரி - கொழும்பு	கொழும்பு க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளினை பெற்ற மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தொழில்கல்வி தொடர்பில் நிகழ்நிலை விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்	92
06.	2021.06.28	பிரதேச செயலகம் – களுத்துறை	புதிய பட்டதாரிகளுக்கான உற்றறி பண்பாற்றல் முறை பற்றிய சோதனை மற்றும் மதிப்பீட்டை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்நிலை அடிப்படையில் திட்டம்	28
07.	2021.07.13	கல்விப்பிரிவு - களுத்துறை	10 ஆம் வகுப்புக்கான விருப்பப் பாடங்களைத் தேர்ந்தெடுக்க நிகழ்நிலை அடிப்படையில் திட்டம்	158
08.	2021.05.10	ஞானோதய வித்தியாலயம் - களுத்துரை	க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு பின்பு தொழில் கல்வி தொடர்பில் நிகழ்நிலை அடிப்படையில் திட்டம்	296
09.	2021.08.11	இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை	எதிர்காலத்திற்கான Chef நிகழ்ச்சித் திட்டம் – 2021 மென்திறன் அபிவிருத்தி	FB நேரலை,VTA You Tube அலைவரிசை
10.	2021.08.12	இளைஞர் தினம்	திறன் மேம்படுத்தல் தொழில் வழிகாட்டுதலின் முக்கியத்துவம் 2021	800 இளைஞர்கள் பங்களிப்புடன் FB நேரலை நிகழ்ச்சித் திட்டங்கள்

- பின்வரும் கருப்பொருள்களின் கீழ் 50,383 பெறுநர்களுக்கு 2,808 நிகழ்ச்சிகளை நடத்தப்பட்டன;
    - பாடசாலையினை விட்டு வெளியேறுபவர்களுக்கு தொழில் பயிற்சி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி
    - பாடசாலையினை விட்டு வெளியேறுபவர்களுக்கு அவர்களை தொழில் பயிற்சிக்கு வழிநடத்தும் பொருட்டான வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள்
    - தொழில்துறை வேலை வாய்ப்புகள் பற்றிய ஒருங்கிணைப்பு திட்டங்கள்
    - முன்கற்றல் (RPL) அமைப்பை அங்கீகரிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
    - RPL அமைப்புக்கு நேரடியாக விண்ணப்பிப்பதற்கு நெறிப்படுத்தல்
    - அரசு அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
    - பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
    - பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (கல்விப் பொது சாதாரண மற்றும் உயர் தரம்)
    - நடைமுறை வன்பொருள் நகல்களைப் பயன்படுத்தி உற்றறி பண்பாற்றல் முறை சார்ந்த (psychometric) சோதனைகளை நடத்தல்
    - தொழிற்கல்வி பற்றிய பிற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
    - whatsapp, viber, imo, messenger, facebook live, youtube, zoom webinar மற்றும் பிற நிகழ்நிலை முறைகள் மூலம் 600

நிகழ்ச்சிகளை நடத்தப்பட்டதுடன், 6,100 பெறுநர்கள் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

- மூன்றாம் நிலை மற்றும் தொழினுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித் துறையை மேம்படுத்த மாவட்ட செயல்பாட்டுக் குழுக்களின் கீழ் 5 முக்கிய மற்றும் 8 துணைக் குழுக்களை நடத்துதல்.

2.1.2 ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

- தேசிய புத்தாக்க முகவராண்மையினை தாபித்தல் (NIA)

தேசிய புத்தாக்க முகவராண்மையானது (NIA) சமூகம், விஞ்ஞானமும் தொழினுட்பமும், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சேவை ஆகிய துறைகளில் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பில் சிறந்த புரிதலை மேம்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் சிறந்த தாக்கங்களினை ஏற்படுத்தல் வேண்டும் என்ற குறிப்பிட்ட நோக்கங்களுடன் 2019 ஆம் ஆண்டின் 22 ஆம் ஆம் இலக்கத்தினை கொண்ட சட்டத்தின் ஊடாக பணிப்புரை செய்யப்பட்டதற்கு அமைய நிறுவப்பட்டது. 08.03.2021 அன்று நடைபெற்ற அமைச்சர்களின் அமைச்சரவை கூட்டத்தில், விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாகங்களுக்கான கூட்டிணைப்பு செயலகத்தை (COSTI) தேசிய புத்தாக்க முகவராண்மைக்குள் உள்வாங்குவதன் மூலம், தேசிய புத்தாக்க முகவராண்மையினை தாபிப்பதற்கும் அத்துடன் விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாகங்களுக்கான கூட்டிணைப்பு செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட பாதீடு உட்பட ஆளணி மற்றும் பிற வளங்களைப் பயன்படுத்தி தேசிய புத்தாக்க முகவராண்மை தொடங்கப்படுவதற்கும் முடிவு செய்யப்பட்டது. தேசிய புத்தாக முகவராண்மையின் முதல் வழிகாட்டுதல் மன்ற கூட்டமானது, 2021 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்றது. இக்கூட்டத்தின் பிரதான தலைமைத்துவமானது, ஜனாதிபதியின் செயலாளரினால் வகிக்கப்பட்டது.

- விஞ்ஞான தொழினுட்ப பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்

❖ தேசிய விஞ்ஞானம் தினம்

தேசிய விஞ்ஞான தினம் மற்றும் தேசிய விஞ்ஞான வாரம் - 2021 இனை கொண்டாடுவதற்கு, இராஜாங்க அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களுடன் இணைந்து நிகழ்வுகள்/ நிகழ்ச்சிச திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய தினத்தை கொண்டாடும் முகமாக, அதி மேதகு ஜனாதிபதி அவர்கள், பிரதம அதிதியாக கலந்து கொள்ள மிகக்கவர்ச்சியான விழாவொன்று அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போ, ‘‘கனவுகளுக்கு உயிர் கொடுக்கும் நிகழ்காலம்’’ என்ற கருப்பொருளின் கீழ் தேசிய புத்தாக்க இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த செயற்பாட்டின் போது, பாடசாலைகளுக்கிடையே புத்தாக்க ஆய்வகங்களின் வலையமைப்பானது நிறுவப்படுதலினை அடையாளப்படுத்தும் முகமாக ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பாடசாலைகளுக்கு நிதி உதவி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும், இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சஹசக் நிமவும் - 2020 போட்டியின் வெற்றியாளர்களுக்கு “Dasis award” வழங்கப்பட்டதுடன், தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் உரிய நேரத்தில் உருவாக்கப்பட்ட பெறுமதி மிகு கருவியான Oxygen Concentrator உம் இதன்போது அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய விஞ்ஞான வாரம் - 2021, இவ்வாரத்தில் ஒரு குறிப்பிட்ட முக்கிய கருப்பொருளுக்காக வாரத்தில் ஒரு நாள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, நவம்பர் 10 - 16 வரையிலான வாரம் முறையே தேசிய விஞ்ஞான தினம், புத்தாக்க தினம், விண்வெளி தொழினுட்ப தினம், காப்புரிமை தினம், ஆற்றல் தினம், புத்தாக்க ஊக்குவிப்பு தினம் மற்றும் விஞ்ஞான ஊக்குவிப்பு தினம் என முறையே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்களில், கௌரவ. அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர் மற்றும் இத்துறையினை சார்ந்த நிர்வாக அதிகாரிகள் ஆகியோரின் பங்களிப்பின் கீழ், பிரதான கருப்பொருள் ஒன்றினை அடிப்படையாக கொண்ட ஒரு நிகழ்ச்சிச் திட்டமும், அதனோடிணைந்த வகையில் வேறு பல நிகழ்ச்சித்திட்டங்களும் இடம் பெற்றன.

- தேசிய விஞ்ஞான தின கொண்டாட்டங்களுடன் இணைந்த வகையில், தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்துடன் இணைந்து, அன்றாட வாழ்க்கைக்கான விஞ்ஞான போட்டி நடாத்தப்பட்டது.

  இந்தப் போட்டியின் முக்கிய நோக்கமானது, பாடசாலை சமூகத்தினரிடையே விஞ்ஞானக் கருத்துகளை ஊக்குவித்தலோடு விஞ்ஞானத்தில் அவர்களின் வினவல் ஆற்றலினை மேம்படுத்தும் அதே வேளையில், எமது சுற்றுச் சூழலுடன் இணைந்த வகையில் உள்ள விஞ்ஞானம் தொடர்பிலான அறிவினை அவர்கள் அறியச் செய்வதும் ஆகும். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான கொண்டாட்ட விழாவானது, 2021.11.15 அன்று, 2021 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான வாரத்துடன் இணைந்த வகையில் தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த விழாவில் சிறந்த கல்வி வலயம் மற்றும் சிறந்த பாடசாலைகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. என்பதுடன் இதன் போது (தகுதிச் சான்றிதழ் பெற்றவர்கள் உட்பட) விருது பெற்றவர்களின் எண்ணிக்கை 156 ஆகும். மேலும், வழிகாட்டுதலின்படி புத்தகங்களை சமர்ப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும், சிறந்த கருதுகோள்கள் அடங்கிய சிறு புத்தகம் அவர்களிடையே விநியோகிக்கப்பட்டது.

- ஏனைய E-News வலைத்தளத்தினை தொடங்கலும் விருத்தி செய்தலும்

  இந்த அமைச்சினால் முன்னர் வெளியிடப்பட்ட வித்யா நாளிதழுக்கு மேலும் தொழினுட்ப ரீதியாக சீரமைக்கப்பட்ட அம்சத்தை வழங்கும் நோக்கத்துடன் இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இணையத்தள வடிவமைப்பில் 75% அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும், இணையதளத்தில் வெளியிடுவதற்கான கட்டுரைகளை சேகரிக்குமாறு உள் மற்றும் வெளி தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டு தற்போது கட்டுரைகள் பெறப்பட்டு வருகின்றன.

- "Skills Sri Lanka" புதினப்பத்திரிகையில் ஆக்கங்களினை வெளியிடல்

  விஞ்ஞானம், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் தொடர்பான 08 கட்டுரைகளாவன "Skills Sri Lanka" புதினப்பத்திகையில் வெளியிடப்பட்டன.

- தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டகத்தின் அமுல்படுத்துகை - (NRDF)

  - ஆராய்ச்சி மற்றும் புத்தாக விருத்தியினை இலக்காகக் கொண்டு சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களினை ஏற்பாடு செய்தல்

உள்ளூர் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில், வடமத்திய, ஊவா, மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களினை சார்ந்த திறன் அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்டு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் இணைந்து பயிற்சி நிகழ்ச்சிச் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

❖ தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட "வருடாந்த ஆராய்ச்சி மதிப்பாய்வு-2020" க்கு பங்களிப்பு செய்தல்

2020 ஆம் ஆண்டில் விஞ்ஞானிகளால் ஆற்றப்பட்ட பணியாது, இலங்கையின் குடிமக்கள் மீது எந்தளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை எடுத்துரைக்கவும், அவர்கள் மேற்கொண்ட பணிகளின் உயர் தரத்தை நிரூபிக்கவும் வருடாந்திர ஆய்வு மதிப்பாய்வானது விஞ்ஞானிகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இது, 2021 ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி அன்று கண்டியில் உள்ள தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனத்தில் உள்ள பேராசிரியர் சிறில் பொன்னம்பெரும கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்படி, மிகச் சிறந்த ஆராய்ச்சியாளர்கள் 2020 என்ற கருப்பொருளின் கீழ் 04 ஆராய்ச்சியாளர்களும், சேவை விருதுக்கான 01 விருதும், மின்னணு ஊடகத்தில் திறந்த விஞ்ஞான வட்டத்திற்கு 03 விருதுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

❖ தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் இளம் விஞ்ஞானிகள் சங்கத்தின் (YSA-NIFS) 2021 ஆம் ஆண்டுக்கான மூன்று நிமிட ஆய்வறிக்கை போட்டி

தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்தினை சார்ந்த பட்டதாரி மாணவர்களுக்கு ஒரு அடிப்படையினை வழங்கும் நோக்குடன், மூன்று நிமிடங்களுக்குள் அவர்கள் தங்களது ஆராய்ச்சியை ஒரு தகவல் என்ற முறையில் வெளிப்படுத்தும் வகையில் YSA-NIFS ஆல் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் இது அவர்களது, காட்சிகளினை விளக்கப்படுத்தக்கூடிய திறன்களை மேம்படுத்துவதையும், விஞ்ஞான அறிவற்ற பார்வையாளர்களுக்கு விஞ்ஞானத்தினை அடிப்படையாக கொண்ட விபரங்களினை பொருத்தமான மொழியில் தெளிவுபடுத்துதலினையும் நோக்கமாகக் கொண்டுள்ளது, இது அவர்களின் வாழ்க்கையில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த முயற்சியின் மதிப்பைக் கருத்தில் கொண்டு, இந்த அமைச்சு இத்திட்டத்திற்கு நிதியுதவி அளித்துள்ளது.

- ஆராய்ச்சி மற்றும் புத்தாகங்களுக்கு ஆதரவு வழங்கள்

❖ ஆராய்ச்சி திட்டங்களை மதிப்பாய்வு செய்ய "ஆராய்ச்சி முகாமைத்துவ அமைப்பினை" தொடங்கல்.

ஆராய்ச்சி முகாமைத்துவ அமைப்பினை தொடங்குவதற்கு ஒரு கருத்துகுறிப்பினை விருத்தி செய்தல், அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து ஆராய்சிகளையும் மேற்பார்வை மற்றும் பரிசீலனை செய்தல். தரவு முகாமைத்துவ முறைமையினை சீரமைப்பதற்காக அமைச்சின் கீழடங்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி ஒரு பொறிமுறையைக் கண்டறிய தொடர்புடைய நிறுவனங்களுடன் (உதாரணம்: தேசிய விஞ்ஞான மன்றம், தேசிய ஆராய்ச்சி மன்றம், தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனம், விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாகத்திற்கான கூடிணைப்பு செயலகம்) கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

❖ இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் வழங்கப்படும் ஆராய்ச்சி திட்டங்களின் மதிப்பாய்வு.

ஒரு பொறிமுறை முன்மொழியப்பட்டது. ஆராய்ச்சி நிறுவனங்களால் அடையாளம் காணப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்காக ஒரு மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட நோக்கங்கள் வெற்றி பெறும் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சியை குழு அவ்வப்போது மதிப்பீடு செய்யும். 2022 ஆம் ஆண்டின் நிமித்தம், இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களை இராஜாங்க அமைச்சு தனது கவனத்தில் கொள்ளும்.

❖ முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2014 இன் படி ஆராய்ச்சி கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக ஆராய்ச்சி திட்டங்களின் மீளாய்வு செய்தல்

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2014 இன் படி ஆராய்ச்சி கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவினால் அமைச்சுக்கு பெறப்பட்ட 09 ஆராய்ச்சி முன்மொழிவுகள், 09 இடைக்கால அறிக்கைகள் மற்றும் 04 இறுதி அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சர்வதேச ஒத்துழைப்பு

❖ இந்திய-இலங்கை கூட்டு ஆராய்ச்சி திட்டம்

இரண்டாம் கட்ட ஒத்துழைப்புக்கள் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் 17 ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதி ரீதியாக உதவிகள் வழங்கப்பட்டதோடு 08 ஆராய்ச்சி திட்டங்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. கோவிட் 19 காரணமாக ஏற்பட்ட சிரமங்களினால் மீதமுள்ள ஒன்பது திட்டங்கள் இன்னும் செயல்பாட்டிலேயே உள்ளன. சகல ஆராய்ச்சி திட்டங்களும் 2021 ஆம் ஆண்டில் 43 விஞ்ஞான வெளியீடுகளை வழங்கியுள்ளன. மூன்றாம் கட்ட ஒத்துழைப்புக்களாவன, 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 178 ஆய்வு முன்மொழிவுகள் மற்றும் 14 பட்டறைகள் மதிப்பீடு செய்யப்பட்டதனை தொடர்ந்து 09 ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் 03 பயிற்சி பட்டறைகள் தேர்வு செய்யப்பட்டதுடன், அந்த ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் பட்டறைகள் என்பன அமைச்சின் ஆராய்ச்சி பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

❖ அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பின் (CERN) உயர் ஆற்றல் பௌதீகவியலில் PhD பட்டங்கள்

அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய நிறுவனமானது (CERN) உயர் ஆற்றல் பௌதீகவியல் எனும் பரப்பெல்லையில் இலங்கைக்கு ஆதரவு நிதியங்களினை வழங்குவதற்காக ஒரு PhD திட்டத்தை ஆரம்பித்துள்ளது. CERN இல் தங்களுடைய படிப்பைத் தொடர்கின்ற இலங்கை விஞ்ஞானிகள், 2021 ஆம் ஆண்டில் 72 விஞ்ஞான வெளியீடுகளை வெளியிட்டுள்ளனர். உயர்தர பௌதீகவியல் ஆசிரியர்களுக்காக துணிக்கை பௌதீகவியல் தொடர்பான ஆசிரியர் பயிற்சி வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டமானது, தொடங்கப்பட்டதோடு அவை நாட்டில் மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் நடத்தப்பட்டன. உயர்நிலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக துணிக்கை பௌதீகவியல் பற்றிய காணொளிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. மேலும், CERN அமைப்பு பற்றி இலங்கை தரப்பு ஆராய்ச்சியாளர்கள் குழுவினால் ஒரு காணொளி உருவாக்கப்பட்டுள்ளது

❖ இலங்கையில் கிறிசோடைல் அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளினை பாதுகாப்பாக பயன்படுத்துதல் தொடர்பில் பணிக்குக்குழு

எங்கள் அமைச்சு மற்றும் ரஷ்ய கூட்டமைப்பின் யூரல் வர்த்தக சபை ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டிணைவின் விளைவாக, ரஷ்ய மற்றும் இலங்கையினை சார்ந்தோர் அடங்கிய ஒரு பணிக்குழுவானது, இலங்கையில் கிரிசோடைல் அஸ்பெஸ்டஸின் பாதுகாப்பான பயன்பாட்டைப் புரிந்துகொள்வதற்காக நியமிக்கப்பட்டது. இலங்கையில் தொழில்துறை, கட்டுமானத் தளங்கள் மற்றும் இறுதிப் பயனர் மட்டங்களில் அஸ்பெஸ்டஸ் பாவனையின் சாதக மற்றும் பாதக விளைவுகளினை ஆராய்வதற்கு இலங்கை மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் பணிக்குழுக்களின் வேண்டுகோளின் பேரில், 04 ஆய்வுக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன.
இந்த ஆய்வுகளின் முன்னேற்றம் குறித்து ஆலோசிப்பதற்காக 08வது பணிக்குழு கூட்டமானது 2021 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையில் இலங்கையில் கொழும்பில் நடைபெற்றது.

❖ கையெழுத்திடப்பட்டு தொடங்கப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள்

அமைச்சானது இதுவரையில் 10 நாடுகளுடன் 12 புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. 02 அமைப்பு புற விதிகளாவன அண்மித்த எதிர்காலத்தில் கைச்சாத்திடப்படும்.

- சூரிய பலகங்களின் முன் மாதிரி உற்பத்திகள் பற்றிய கருத்திட்டம்

இந்த கருத்திட்டமானது மூன்று பல்கலைக்கழகங்களால் செயல்படுத்தப்படுகிறது. அவையாவன களனிப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பனவாகும். தொழினுட்ப ஆதரவானது, தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனத்தினால் (NIFS) குறிப்பாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் நிமித்தம் வழங்கப்படுகிறது.
இத்திட்டத்தின் கீழ், கம்பஹா மற்றும் கம்பளையினை சார்ந்த 03 பாடசாலைகளைச் சேர்ந்த 177 மாணவர்களுக்கு மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சிச் திட்டங்கள் நடத்தப்பட்டன.

நாடளாவிய ரீதியில் உள்ள 9 தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மையங்களின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 136 விண்ணப்பதாரர்களுக்கு NVQ நிலை 4 திட்டமானது தொடரப்பட்டது. மதிப்பீட்டாளர்களினை பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டமானது தொடங்கப்பட்டதோடு, இப்பயிற்சி திட்டமானது 84 NVQ பயிற்சியாளர்களுக்கு, அம்பாந்தோட்டையில் உள்ள சோலார் பூங்காவில் ஆரம்பமானது. NVQ சூரிய தொழினுட்ப வல்லுநர்கள் பயிற்சித் திட்டத்தின் இரண்டாவது தொகுதியானது காலி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை பிரதேசங்களினை சார்ந்த தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மைய நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டன. NVQ நிகழ்ச்சி திட்டத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு 76 பேருக்கு முன் மதிப்பீடுகள் செய்யப்பட்டன.

தேசிய விஞ்ஞான வாரத்தை கொண்டாடும் முகமாக பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கிய நிகழ்ச்சி திட்டமானது களனி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் சூரிய ஆற்றலின் முக்கியத்துவம்
- எங்கள் ஆய்வகங்களில் CdTe மெல்லிய படல சூரிய மின்கலங்களை உருவாக்குவது பற்றிய விளக்கக்காட்சி
- கருத்திட்டத்தால் உருவாக்கப்பட்ட ஆய்வக அளவிலான சூரிய மின்கலத்தின் நேரடி விளக்கக்காட்சி
- சூரிய ஆற்றலின் பல்வேறு பயன்பாடுகளின் விளக்கங்கள்

- முதலாவது சூரிய தொழினுட்பவியலாளர்கள் பயிற்சித் திட்டத்தின் பயிற்சியாளர்களுக்கு பாடநெறி நிறைவு கடிதங்கள் வழங்கப்படல்

- பசளை மற்றும் மண் முகாமைத்துவதினை மேம்படுத்துவதன் மூலம் தரமிழந்த மண்ணின் தரத்தினை மேம்படுத்துதல்

குருநாகல், அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் குறிப்பாக 2021 ஆம் ஆண்டின் யால பருவத்தில் 55,000 ஏக்கர் நிலப்பரப்பில் உயிரியல் மென்சவ்வு உயிரியல் பசளையானது (BFBF) பயன்படுத்தப்பட்டது. மேலும் ரைசோபியம் உயிரியல் பசளையானது (RBF), 8939 ஏக்கர்களில் வளர்க்கப்பட்ட சோயாபயறு, 5277 ஏக்கர்களில் வளர்க்கப்பட்ட பாசிப்பயறு, 250 ஏக்கர்களில் நிலக்கடலை, 140 ஏக்கர்களில் கால்நடைத் தீவன புல் மற்றும் 290 ஏக்கர்களில் காய்கறி அவரை சாகுபடி ஆகியவற்றிற்கு அதே பருவத்தில் விநியோகிக்கப்பட்டது. 2021/2022 வருட காலத்தின் மகா போகத்தில் கள சோதனைகள் தொடங்கப்பட்டன. அரசாங்கத்தின் கரிம உரத் திட்டத்தில் 110,000 ஏக்கர் நெல் சாகுபடிக்கு உயிரியல் மென்சவ்வு உயிரியல் பசளையானது (BFBF) விநியோகிக்கப்பட்டது.
தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகமானது, அரசின் இலவச உர விநியோகத் திட்டத்தின் கீழ், தேசிய உரச் செயலகம் மற்றும் கமத்தொழில் அமைச்சின் கமத் துறை (DOA) ஆகியவற்றுடன் இணைந்து நெல் சாகுபடியில் உயிரியல் மென்சவ்வு உயிர் பசளை பயன்படுத்தப்படலினை ஊக்குவிக்கிறது.

- விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் புத்தாகத்திற்கான கூட்டிணைப்பு செயலகம் (COSTI)

❖ அதி புலமை சொத்து (IP) மற்றும் தொழினுட்பவியல் மாற்றீடு நிகழ்ச்சித்திட்டம்

அதிபுலமை சொத்துரிமைகள், காப்புரிமை தேவைப்பாடுகள் மற்றும் கட்புல மற்றும் அரங்கக் கலைகள் பல்கலைக்கழக அலுவலர்களுக்கான செயல்முறை என்பவை தொடர்பில் இணையத்தள அடிப்படையிலான ஒரு அமர்வானது, தொழினுட்ப கண்டுபிடிப்பு ஆதரவு மையத்தினால் (TISC) விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் புத்தாகத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்தில் (COSTI) நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் வணிக இணைப்புப் பிரிவினால் இந்த அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

❖ காப்புரிமை தேடலும் நிகழ் நிலை பயிற்சித் திட்டத்தினை வரைவு செய்தலும்

காப்புரிமைத் தேடல் மற்றும் வரையறுக்கப்பட்ட ஹேலிஸ் டிப்ட் ப்ராடக்ட் தனியார் நிறுவகத்தின் ஆராய்ச்சி குழுவினரை வரைவு செய்தல் என்பவை தொடர்பில் ஐந்து நாட்களினை கொண்ட நிகழ் நிலை பயிற்சித் திட்டமானது, தொழினுட்ப கண்டுபிடிப்பு ஆதரவு மையத்தால் (TISC) விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் புத்தாகத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்தில் (COSTI) நடத்தப்பட்டது பங்கேற்பாளர்களுக்கு காப்புரிமை தேடல் நுட்பங்கள், காப்புரிமை வரைவு நடைமுறைகள் மற்றும் உத்திகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

❖ "ஆண்டின் புத்தாக ஏற்றுமதி தயாரிப்பு" என்பதற்கான மதிப்பீட்டு அளவுகோல்களாவன ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளினை வழங்குவதற்காக உருவாக்காப்பட்டதுடன், (2018, 2019, 2020 மற்றும் 2021) தேர்வுக் குழுவில் மதிப்பீட்டாளர்களாகவும் பங்களிப்பு செய்யப்பட்டது.

- EIE வழிகாட்டுதல் திட்டம் 2021 - EIE மற்றும் EIE அல்லாத நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் 20 தொழினுட்பங்கள் அடுத்த வழிகாட்டுதல் திட்டத்திற்காக WIPO க்கு சமர்ப்பிக்கப்பட்டன. WIPO ஆனது காப்புரிமை நிலப்பரப்பு பகுப்பாய்வு தொடர்பில் தன் ஆதரவினை வழங்குகிறது - அடையாளம் காணப்பட்ட தொழினுட்ப பகுதிகளில் காப்புரிமை நிலப்பரப்பு அறிக்கைகளை உருவாக்க கலந்துரையாடல் ஒன்று தொடங்கப்பட்டது.

- நிறுவன அடிப்படையிலான அதி புலமை சொத்து சொத்துக் கொள்கை அபிவிருத்தி திட்டம்

  புத்தாக்க சூழலைச் செயல்படுத்தும் (EIE) கருத்திட்டத்தின் கீழ் அடங்காத பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுக்காக விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் புத்தாகத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்துடன் இணைந்து ஒரு நிகழ்ச்சித்திட்டமானது உலக அதி புலமை சொத்து அமைப்பினால் (WIPO) தொடங்கப்பட்டது. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (KDU), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் (RRI), மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவனம் (NIPHM) ஆகியவை முதன்முறையாக இதில் அங்கம் வகிக்கும் சிறப்பினை பெற்றன.

- KIPO/KIPA ஏற்புடைய தொழினுட்ப மேம்பாட்டுத் திட்டம் 2021

  அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நிலையான பொருளாதார வளர்ச்சியை எளிதாக்கும் பொருட்டு, "ஏற்புடைய தொழினுட்பம்" என்ற தலைப்பில் ஒரு கருத்திட்டத்தினை கொரிய கண்டுபிடிப்பு ஊக்குவிப்பு சங்கமானது (KIPA) கொரிய அதிபுலமை சொத்து அலுவலகத்துடன் (KIPO) இணைந்து முன்னெடுக்கிறது. கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கொரிய அரசாங்கத்தின் நிதி மற்றும் தொழினுட்ப உதவியுடன் அபிவிருத்தி அடைந்து நாடுகளில் ஏற்புடைய தொழினுட்பங்களை உருவாக்குவதை இந்த திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

  சமூக நீர் சுத்திகரிப்பு அமைப்புகளின் அபிவிருத்தியுடன் தொடர்புற வகையில் - மூன்று மறு தலை வடிவிலான சவ்வூடுபரவல் / கைத்தொழில் தொழினுட்ப நிறுவகத்தின் (ITI) சிவப்பு களிமண் வடிகட்டுதல் தொழினுட்பத்துடன் இணைந்து நிறுவப்பட்ட உயர் வடிகட்டல் முறைமை - பலகல உயர் வடிகட்டுதல் மற்றும் RO இயந்திரங்கள் படிகாரமடுவ, கலென்பிந்துனுவெவ 679, ஹிங்குருவெவ GND. KIPA/ KIPO இலிருந்து பெறப்பட்ட நிதி, திட்ட மேம்பாட்டிற்காக நீர் வழங்கள் சபை மற்றும் கைத்தொழில் தொழினுட்ப நிறுவகம் என்பனவற்றிக்கு ஒதுக்கப்பட்டது.

  இந்த விஜயத்தின் போது, கொரிய மற்றும் விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் புத்தாகத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்தினை சார்ந்த அதிகாரிகள், நிறுவப்பட்ட நீர் சுத்திகரிப்பு அமைப்புகளை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யும் நோக்கங்களுக்காக பார்வையிட்டனர். மேலும் இவ் விஜயத்திற்கு போது, கருத் திட்டத்தின் இறுதி நிலை வளர்ச்சி தொடர்பில் ஒரு வெளிப்புற மதிப்பீட்டு ஆய்வானத்து கொரிய நாட்டினை சார்ந்த மூன்றாம் தரப்பு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

  2021 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தேவையான உதிரி பாகங்களை முறையே விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் புத்தாகத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்திற்கும் மற்றும் தேசிய நீர் வழங்கள் சபைக்கும் ஒப்படைப்பதற்காக கொரிய அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

- இலங்கை கோள்மண்டலம்

  ❖ விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்

  பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரபல்யப்படுத்தல் முறை	நிகழ்ச்சிச் திட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
கோள் மண்டல காட்சிகள்	46	3,351
வெளி வாரி நிகழ்ச்சித்திட்டங்கள் / வலைதளத்தினை அடிப்படையாக கொண்ட நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டங்கள்	19	12,500
தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	2	நாடளாவிய ரீதியில்
சிறு பிள்ளைகளுக்கான Astro Kids மற்றும் Astro தகவல் தொழினுட்ப வகுப்புக்கள்	ஒரு வாரத்திற்கு 7 வகுப்புக்கள்	120

2.2. எதிர்கால இலக்குகள்

- "நிபுநதா உதான 2022" நிகழ்ச்சித் திட்டம் பல்வேறு மாகாணங்களை மையப்படுத்தி, தொழிற்பயிற்சி நிறுவனங்களில் ஒட்டுமொத்த செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட உள்ளதுடன், அதற்கேற்ப பயிற்சி நிறுவனங்களில் பௌதீக மேம்பாடு மற்றும் பாடத்திட்ட மேம்பாடுகளைச் செய்ய திட்டமிட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் முதல் படி வடமேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு மேம்பாடு.
- தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிற்றுவிப்பாளர்களுக்கான திறன் கொடுப்பனவு.
- தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவித்தொகை திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு மேம்பாடு.
- ஆராய்ச்சிப் பொருள் இறக்குமதியில் செயல்திறனை அதிகரிக்க பசுமை அலைவரிசையினை அறிமுகப்படுத்துதல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான தனியார் துறை முதலீட்டில் மூன்று வகையான வரி குறைப்பை அறிமுகப்படுத்துதல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் (பல்கலைக்கழகங்கள், தொழினுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள் போன்றவை) அடைகாப்பக வசதிகளை விரிவுபடுத்துதல்.
- நிகழ்நிலை மூலம் நடத்தப்படும் பயிற்சிகளினை பயனுள்ள வகையில் நடத்துவதற்கான வசதிகளை மேம்படுத்துதல்.
- ஜேர்மனி அரசாங்கத்தின் ரூபாய் 15.7 மில்லியன் மானியத்தின் கீழ் மாத்தறையில் தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.

- இலங்கையில் ஜேர்மன் தொழினுட்பக் கல்லூரிகளை நிறுவுவதற்காக இலங்கை ஜேர்மன் தொழினுட்பப் பயிற்சி நிறுவனத்தின் சட்டத்தை மீளாய்வு செய்தல்.
- IETI – Katubedda திட்டத்தின் உடன்படிக்கைக்கான எதிர்கால நடவடிக்கைகளினை திட்டமிடல்.
- JAICA தன்னார்வத் திட்டத்தின் கீழ் தொழிற்கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான தன்னார்வ சேவையைப் பெறல்.
- தொழினுட்பக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சித் துறையை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களை நிறுவுதல்
- தொழில் வழிகாட்டலுக்குப் பொறுப்பான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் விழிப்புணர்வு மூலம் பள்ளிகளில் தொழில் வழிகாட்டுதலை ஒழுங்குபடுத்துதல்.
- திறன் அபிவிருத்தி உதவியாளர்களின் திறன் மேம்பாட்டின் ஊடாக பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்.
- "200,000 சமுர்த்தி குடும்பங்களுக்கு வலுவூட்டல்" திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளி குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கான தொழில் வழிகாட்டல் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தேசிய கொள்கை கட்டமைப்புடன் இணைந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளினை மேம்படுத்தல் - சௌபாக்கியத்தின் நோக்கு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள்.
- உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீடு (GII) மற்றும் உலகளாவிய போட்டித்தன்மை குறியீடு (GCI) ஆகியவற்றின் உயர் தரவரிசையை அடைதல்.
- சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் நிலையை அதி நவீன படுத்தல்.
- ஆராய்ச்சி நிறுவனம்/தொழில் ஆராய்ச்சி கூட்டுத் திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- நாட்டின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி முன்னேற்றத்தைக் கண்காணிக்க நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறையை நிறுவுதல்.


2.3. சவால்கள்

- ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புத் துறைக்கு போதுமான நிதியுதவி அரசிடமிருந்து கிடைக்கப்பெறாமை
- நாட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் தனியார் துறை பங்களிப்பை உறுதி செய்வதற்கு புதுப்பிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் உத்திகள் இல்லாமை
- காப்புரிமை செயல்முறையில் தாமதங்கள்
- ஆராய்ச்சி வணிகமயமாக்கல் சிக்கல்கள்
- அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஊதியமானது குறைவாக இருப்பதனால் ஆராய்ச்சி நிறுவனங்களில் நிபுணர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் உள்ள சிக்கல்கள்
- விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பணிகளின் நிமித்தம் வெளிநாடுகளுக்கு வெளியேறுதல் – புத்திஜீவிகளின் வெளியேற்றம்
- பலவீனமான தொழிற்துறை-பல்கலைக்கழகம்-ஆராய்ச்சி நிறுவனம் என்பனவற்றுக்கு இடையிலான கூட்டிணைவுகள் பலவீனமாக இருத்தல்

- பட்டதாரிகள் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்தினை அடிப்படையாக கொண்ட தொழிலினை தொடங்குவதற்கு வணிகக் கலங்கள் / தொடக்கங்கள் என்பன இல்லாமை
  (சிறிய அளவில்)

- சர்வதேச மட்டத்தில் போதிய ஒத்துழைப்புகள் இன்மை

- உலகளவில் போட்டியிடுவதற்கு ஏற்ற வகையில் ஆராய்ச்சி முடிவுகள் இல்லாமை



அத்தியாயம் 03

வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	வருமானப் பெறுகைகள்		-		
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		2,253,696,328	3,036,934,739	ஏசீஏ-3
-	வைப்புகள்		95,089,307	68,298,457	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		27,594,361	62,122,440	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		2,376,379,996	3,167,355,636	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		2,376,379,996	3,167,355,636	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		393,180	51,601,212	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		2,375,986,816	3,115,754,424	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்				
621,350,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	554,610,095	510,418,222	
229,400,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	149,422,143	172,685,557	ஏசீஏ-2(ii)
6,192,815,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	5,010,959,318	5,273,552,280	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
7,043,565,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		5,714,991,556	5,956,656,060	
	மூலதனம் செலவினம்				
1,024,760,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	645,141,068	107,666,400	
1,372,975,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	1,185,959,780	1,855,656,014	
1,054,500,000	மூலதன மாற்றல்கள்	12	573,990,477	638,345,120	ஏசீஏ-2(ii)
10,000,000	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	5,846,132	86,248,460	
28,400,000	நிரல் விருத்தி	14	15,261,378	155,931,280	
513,890,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	307,289,146	1,235,101,309	
4,004,525,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		2,733,487,980	4,078,948,582	
	வைப்புக் கொடுப்பனவுகள்		11,195,368	20,786,074	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		26,323,360	12,375,672	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		37,518,728	33,161,746	
11,048,090,000	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		8,485,998,264	10,068,766,388	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(6,110,011,448)	(6,953,011,964)	
	பணிமுற்பண இனக்க அறிக்கையின்படி மீதி		(6,110,011,448)	(6,953,011,964)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	5,537,758,620	5,544,420,133
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	71,326,302	72,597,303
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		5,609,084,922	5,617,017,436
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(171,465,568)	(86,300,628)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		5,537,758,620	5,544,420,133
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	242,791,870	158,897,931
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		5,609,084,922	5,617,017,436

பக்க இலக்கம் 06 முதல் 117 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் முலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 118 முதல் 137 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் முலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அரிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ ~~பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)~~
பெயர்:	பெயர்:	பெயர் : 2022 . 02. 28
பதவி : 28/03/2022	பதவி : 2022 . 02. 28	
	Deepa Liyanage Secretary State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovation	K. V. S. DE SILVA Chief Finance Officer State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovation "Nipunatha Piyasa", 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05.

Professor K. Kapila C.K. Perera
Secretary
Ministry of Education
"Isurupaya"
Pelawatte,
Battaramulla.

3.3 காசோட்டக் கூற்று

ஸ்ரீலங்கா ரூபா

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	திருத்தப்பட்ட
	2021 ரூபா	2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உற்றுரைப் பற்றுரைகள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	25,299,767	14,169,723
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	2,253,696,328	3,036,934,739
முற்பணங்களை அறவிடல்	24,537,781	19,170,869
வைப்புக்களின் பெறுகை	95,089,307	68,298,432
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	2,398,623,183	3,138,573,764
கழி : பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	694,935,218	635,510,925
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	147,336,318	26,251,260
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	4,930,020	81,250,369
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	393,180	51,601,212
முற்பணக் கொடுப்பனவு	25,732,935	8,279,885
வைப்புக் கொடுப்பனவு	11,195,368	20,786,049
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	884,523,040	823,679,700
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	1,514,100,143	2,314,894,064
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி : பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	1,514,100,143	2,314,894,064
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	1,514,100,143	2,314,894,064
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(1,514,100,143)	(2,314,894,064)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	(0)
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி : பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	(0)
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதியியற் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

அறிக்கை செய்தலின் அடிப்படை

1. அறிக்கை செய்யும் காலப்பகுதி

இந்த நிதிக்கூற்றுக்களினது அறிக்கை செய்யும் காலப்பகுதியானது 2021 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 31 வரையில் ஆகும்.

2. தயாரிப்பின் அடிப்படை

குறிப்பிட்ட சொத்துக்களாவன மறுமதிப்பீட்டின் மூலம் மாற்றியமைக்கப்பட்டு வரலாற்றுச் கிரய அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, வேறுவிதமாக குறிப்பிடப்படாவிட்டால், மாற்றியமைக்கப்பட்ட பண அடிப்படையில் கணக்கிடப்படும்.

நிதிநிலை அறிக்கைகளின் புள்ளிவிபரங்கள் அண்மித்த இலங்கை ரூபாயில் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3. வருமானத்தை அங்கீகரித்தல்

தொடர்புடைய வருவாயினை பொறுத்த வரையில் அவை, காலத்தைப் பொருட்படுத்தாமல் கணக்கியல் காலத்திற்குரிய பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத வருவாய்களின் பண பற்றுச்சீட்டுக்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

4. சொத்து, ஆதனம் மற்றும் உபகரணங்களின் அங்கீகாரம் மற்றும் அளவீடு (PP&E)

சொத்து, ஆதனம் மற்றும் உபகரணங்கள் என்பன, சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் போதும் மற்றும் சொத்துக்களின் கொள்விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும் போதும் அவை அங்கீகரிக்கப்படுகிறது.

சொத்து, ஆதனம் மற்றும் உபகரணங்கள் என்பன கொள்விலையில அளவிடப்படும். கொள்விலை கணிப்பீடு பொருத்தமற்றதாக கருதப்படும் போது மீள்பெறுமான மதிப்பீடு கருத்தில் கொள்ளப்படும

5. சொத்து, ஆதனம் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கீடு

இந்த ஒதுக்கீட்டு கணக்கு சொத்து ஆதனம் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்காகும்.

6. காசும் காசிற்கு சமமானவையும்

காசும் காசிற்கு சமமானவையும் எனும் போது அதற்குள் 2021 டிசம்பர் 31 உள்ளவாறாக கையிலுள்ள உள்ளூர் கரன்சி நோட்டுகள் மற்றும் நாணயங்கள் ஆகியவை அடங்கும்.

3.5 வருமான சேகரிப்பின் செயல்திறன்

ஏற்புடையதன்று.

3.6 ஒதுக்கீடுகளின் பாவனையினது செயல்திறன்

ரூ.

ஒதுக்கீடுகளின் வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு இறுதி ஒதுக்கீட்டின்% மாக
	மூலம்	இறுதி		
நடப்பு	6,550,800,000	7,043,565,000	5,714,991,556	81%
மூலதனம்	2,769,600,000	4,004,525,000	2,733,487,980	68%
மொத்தம்	**9,320,400,000**	**11,048,090,000**	**8,448,479,536**	**76%**

3.7 நிதி ஒழுங்கு விதி 208 இன் அடிப்படையில், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களத்தின் முகவர் என்ற வகையில் இந்தத் திணைக்களம் / மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் வழங்கப்படல்

தொடர் இல.	அமைச்சு/ திணைக்களத்திடம் இருந்து பெற்ற ஒதுக்கீடு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு இறுதி ஒதுக்கீட்டின்% மாக
			மூலம்	இறுதி		
1	**கல்வி அமைச்சு**	13 வருடங்கள் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி	2,926,775	2,926,775	2,926,775	100%
2	**ஓய்வூதிய திணைக்களம்**	அரச அலுவலர்களின் B முற்பண கணக்கில் உள்ள மிகுதி அறுதியீடு செய்யப்படல்	226,912	226,912	226,912	100%
3	பொது சேவைகள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு	பட்டதாரி பயிலுனர்களுக்கான சம்பளம்	1,776,333	1,776,333	1,776,333	100%
மொத்தம்			**4,930,020**	**4,930,020**	**4,930,020**	**100%**

3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையின் செயல்திறன்

சொத்து குறியீடு	விவரணம்	31.12.2021 உள்ளவாறான இருப்பு மதிப்பீட்டின் பிரகாரம் மிகுதிகள்	31.12.2021 உள்ளவாறான நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் மிகுதிகள்	கணக்கீடு செய்யப்பட வேண்டியவை	உள்ளவாறு முன்னேற்றத்தை அறிக்கை செய்தல்
9151	வதிவு அல்லாத கட்டிடம்	**1,648,514,058**	**1,648,514,058**		100%
9152	எந்திரம் மற்றும் கருவிகள்	**1,232,126,422**	**1,232,126,422**		100%
9153	நிலம்	**1,494,318,140**	**1,494,318,140**		100%
9154	அருவ சொத்துக்கள்	-	-		-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-		-
9160	நடைமுறை வேலை	**1,162,800,000**	**1,162,800,000**		**100%**
9180	குத்தகை சொத்துக்கள்	-	-		-

3.9 கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

VOT/A/MSDVT/FA/2021 2022 மே 31

பணிப்பாளர் நாயகம்
அரச கணக்குகள் திணைக்களம்

திறன் விருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கை

.....

.....

1. நிதியியற் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திறன் விருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பனவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் நிதிக்கூற்றுக்களாவன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கு அமைவுற இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ள திறன் விருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் நிமிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் திறன் விருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது 2018 ஆம் ஆண்டு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் தொடர்புற்ற வகையில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற சமர்ப்பிக்கப்படுவதற்குள்ள கணக்காய்வு தலைவர் அதிபதியின் அறிக்கையானது பாராளுமன்றத்திற்கு காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

திறன் விருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை *பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு* இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் மீதான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பற்றிய பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்கியல் அலுவலர்களின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கஇ தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு சிரேட்ட கணக்கியல் அலுவலர் பொறுப்பாக உள்ளார்.2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சானது வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுறஇ ஒரு வினைத்திறன் மிகு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அது பயன்பாட்டில் உள்ளது என்றும் அத்துடன்இ கூறப்பட்ட இம்முறைகள் பயனுறுதி மிக்க முறையில் பேணப்படுவதற்கு இம்முறைமை காலத்திற்கு காலம் மீள்நோக்கப்படுகின்றது என்பதையும் சிரேட்ட கணக்கியல் அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன..

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வின் போது ஏனைய விடயங்களுடன் குறிப்பாக எனது கணக்காய்வு காலப்பகுதியின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டின் குறைபாடுகள் உள்ளடங்களாக இனங்காணப்பட்ட கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் சிரேட்ட கணக்காய்வு அலுவலருடன் நான் உரையாடினேன்.

1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) விலுள் தேவைப்பாடுகளுக்கு அமைவுற கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களை நான் முன்வைக்க விரும்புகின்றேன்.

(அ) நிதிநிலை அறிக்கைகள் முந்தைய ஆண்டோடு ஒத்துப்போகின்றன.

(ஆ)முன்னைய வருடத்து நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்பவைக்கப்பட்ட பரிந்துரைப்புகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1.6 நிதியியல் கூற்றுக்கள் பற்றிய கருத்துரைகள்

1.6.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சில பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாமலும், புதுப்பிக்கப்படாமலும் இருப்பதால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகளை பராமரிக்க அமைச்சு தவறியமை மாதிரி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

பதிவேட்டின் வகை	தொடர்புடைய ஒழுங்கு	விதி அவதானிப்புக்கள்
பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு	நிதி ஒழுங்கு விதிகள் 447(4) ரூ(5)	பதிவேடானது நாளது வரையில் புதுப்பிக்கப்படவில்லை மற்றும் மீதமுள்ள பொறுப்புக்கள் மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட பொறுப்புக்கள் என்பன அவற்றுக்கான தொடர்பு குறிப்புக்களுடன் ஒவ்வொரு மாத முடிவிலும் அடையாளம் காணப்படும் என்ற முறையில் பராமரிக்கப்படுகிறது.

2. நிதியியல் மீளாய்வு

2.1 செலவினங்களினை முகாமைத்துவம் செய்தல்

நிதி ஒழுங்குவிதி 50 இற்கு அமைவுற தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படாததால், அமைச்சின் இலக்குகள் மற்றும் இலக்குகளை அடையும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்திற்கு இணங்க, ஒதுக்கீடுகள் செலவிடப்படாமல் இருந்த சந்தர்ப்பங்கள் தொடர்ந்து அவதானிக்கப்பட்டது.

(அ) நடப்பு செலவினம்

வருடாந்த மதிப்பீடுகளின் கீழ் 08 நடப்பு வாக்குப்பண விடயங்களுக்கு வழங்கப்பட்ட நிதியான ரூ.11,100,000 ஆனது எதற்கும் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) மூலதன செலவினம்

15 மூலதன வாக்குப்பண விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 63,400,000 முற்றிலும் செலவிடப்படாமல் இருந்தது.

(இ) அதிகப்படியாக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை மற்ற வாக்குப் பாடங்களுக்கு நிதிஒழுங்குமுறை 66 மூலம் மாற்றுதல்

ஒதுக்கீடுகளைச் செய்வதில் திட்டமிடப்பட்ட நடைமுறை இல்லாத காரணத்தால், 08 நடப்பு வாக்குப்பண விடயங்களுடன் தொடர்புடைய மேலதிக ஒதுக்கீடான ரூபாய் 16,502,944 இல் ரூபாய் 11,250,000 மற்றும் 20 மூலதன வாக்குப்பண விடயங்களுடன் தொடர்புடைய மேலதிக ஒதுக்கீடான ரூபாய் 459,138,915 இல் ரூபாய் 374,581,000 ஆகியன நிதி ஒழுங்கு விதி 66 மூலம் மற்ற வாக்குபண விடயங்களுக்கு மாற்றப்பட்டதுடன் இது 25% முதல் 100% வரையிலாகும்.

(ஈ) குறைவான ஒதுக்கீட்டினை உடைய வாக்குபண விடயங்களுக்கு மற்ற வாக்குகளிலிருந்து ஒதுக்கீடுகளைப் பெறுதல்

மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் முறையான திட்டத்தைப் பின்பற்றாததன் விளைவாக, 09 வாக்குப்பண விடயங்களுடன் தொடர்புடைய ரூபாய் 327,656,000 ஆனது மற்ற வாக்குப்பண விடயங்களிலிருந்து நிதி ஒழுங்குமுறைகள் 66 மூலம் பெறப்பட்டது, இதன் அளவு 28% முதல் 100% வரை இருந்தது.

(உ) நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைவுற பாவிக்காத ஒதுக்கீடுகளினை மாற்றீடு செய்தல்

நிதி ஒழுங்குமுறைகள் 66-ன் கீழ் முறையான திட்டத்தைக் கடைப்பிடிக்காமல் பணப் பரிமாற்றம் செய்ததால், நிதி விதிகள் 66 இன் கீழ் மாற்றப்பட்ட 05 வாக்குப்பணத்துடன் தொடர்புடைய மொத்தம் 14,916,000 ரூபாயில் ரூ.1,958,354 செலவழிக்கப்படாமல் இருந்தது, இதன் அளவு 19% வரை இருந்தது. 40% வரை ஆகும்.

2.2 <u>முற்பண கணக்கு மிகுதிகள்</u>

(அ) தலைப்பு 421 விடய எண். 42101 ஐக் கொண்ட அரச அதிகாரிகளின் டீ கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவையில் காணப்பட்ட ரூ.522,270 கடன் நிலுவைத் தொகையானது, அதிகாரிகள் தங்கள் பதவிகளை விட்டு விலகியதாலும் மற்றும் ஓய்வு பெற்றதன் காரணமாகவும் ஏற்பட்டதாகும் என்பதுடன் இதன் நிலுவைக்காலம் 03 ஆண்டுகள் முதல் 21 ஆண்டுகள் வரையாகும்.

2.3 <u>பொறுப்புக்கள் மற்றும் கடப்பாட்டிற்குள் பதிவு செய்தல்</u>

கீழ் குறிப்பிட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதுக் கணக்குச் சுற்றறிக்கை 255/2017 இன் படி அனைத்துப் பொறுப்புகளும் பதியப்படல் வேண்டும் என இருந்த போதிலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் ரூபாய் 220,967 மதிப்புக்கான பொறுப்புகள் நிதியியல் கூற்றுக்களில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட பொது நிதிகள், செலவழிக்கப்பட்ட முறைக்கு அமைச்சே பொறுப்பேற்க வேண்டும் என்பதனால், சேவைகள் மற்றும் கட்டுமானங்களை வழங்குவதற்கான ஒப்பந்தங்களின் நகல்களை, நிதி ஒழுங்குமுறைகள் 702(3) இன் அடிப்படையில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் தொடங்கப்பட்ட தொழிற்கல்வி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களின் பௌதீக வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொழில்நுட்பக் கல்லூரிகளை அபிவிருத்தி செய்வதற்காக 13 நிகழ்வுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியின் மிகுதி தொகையானது டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறாக நோக்கின் ரூபாய் 40,902,951 ஆகும் என்பதுடன் இந்த நிலுவைத் தொகையைக் கண்டறிய எழுத்துப்பூர்வ ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.4 விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வின் போது விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காது இருந்த கீழ் குறிப்பிட்ட சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன

	தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள்	இணங்காமை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி குறியீடு	
	(i) நிதி ஒழுங்கு விதி 214	அதிகாரமளிக்கும் அலுவலர்கள் மற்றும் சான்றளிக்கும் அலுவலர்கள், நிதி இருப்பு மற்றும் கட்டண பட்டியல்களின் வழக்கமான ரசீதை உறுதி செய்வதற்காக, பொறுப்புகள் குறித்த பதிவேடுகளை தவறாமல் ஆய்வு செய்ய வேண்டும் என்று இருந்த போதிலும், கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புகள் குறித்த பதிவேடு ஆய்வு செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்படவில்லை.
	(ii) நிதி ஒழுங்கு விதிகள் 756,757, மற்றும் 1647 (ஆ)	வாகனங்கள் மற்றும் மேலதிக உபகரணங்கள் குறித்து ஆண்டுதோறும் கணக்கெடுப்பு நடத்த வேண்டியிருந்தும், அந்த பணி மேற்கொள்ளப்படவில்லை.
	(iii) நிதி ஒழுங்கு விதி 1646	ஒவ்வொரு மாதத்திலும் தினசரி ஓட்ட அட்டவணையுடன் பிரயாணத்தின் மாதாந்திரச் சுருக்கத்தின் மூல பத்திரம் என்பன அடுத்த மாதம் 15 ஆம் தேதிக்கு முன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டும் என இருந்த போதிலும் அனுப்பப்பட வேண்டும். அமைச்சுக்கு சொந்தமான 27 வாகனங்களில் 22 வாகனங்கள் தொடர்பாக இத்தேவையை பூர்த்தி செய்ய அமைச்சு தவறிவிட்டது.
(ஆ)	03/2015 எனும் இலக்கத்தினையும் 2015.07.14 எனும் திகதியினையும் கொண்ட அரச நிதி சுற்றறிக்கை	19 சந்தர்பங்களில் வழங்கப்பட்ட பல்வேறு முன்பணங்கள் மற்றும் எரிபொருளைத் அறுதியீடு செய்வதில் தாமதம் என்பதுடன் இந்நிலைமையானது 01 முதல் 04 மாதங்கள் வரையிலும் நிலவி உள்ளது. முன்னொரு சந்தர்ப்பத்தில் இந்நிலைமை வெளிப்படுத்தப்பட்ட போதும் தற்போது வரையிலும் அது சீர்செய்யப்படவில்லை.
		வகை இலக்கம் 02 இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு நிதியீடு முகவராண்மையின் கோரிக்கைக்கு

(இ) 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நிதி அமைச்சினால் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் பற்றி வழங்கப்பட்ட வழிகாட்டல்கள்	அமைவுற பேணப்படவேண்டிய பதிவேடுகள் மற்றும் படிவங்கள் தொடர்பில் கொடுப்பனவு பதிவேடுகளினையும் மற்றும் பதிவுகளினையும் (படிவ இலக்கம் CA 33, CA 34, CA 51,53) பேணுவதற்கு அமைச்சு தவறியுள்ளது.
(ஈ). 09/2009 எனும் இலக்கத்தினையும் 2009 ஜூன் 17 எனும் திகதியினையும் கொண்ட பொது நிதி சுற்றறிக்கை	அமைச்சர்களின் அலுவலர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத்தின் தலைவர்கள் உள்ளடங்கலாக சகல அரச அலுவலர்களும் தமது வருகை மற்றும் புறப்பாட்டினை கையொப்ப வருடல் இயந்திரத்தில் (finger scanners) பதிவு செய்தல் வேணும் என இருந்த போதிலும் அமைச்சர்களின் அலுவலர்கள் எவருமே மேற்கூறப்பட்ட ஒழுங்கு விதியினை பின்பற்றவில்லை என்பதுடன் வருகை மற்றும் புறப்பாடு தொடர்பில் எதுவித உறுதிப்படுத்தல்களும் இன்றி சம்பளங்கள் மற்றும் படிகள் எந்த ரீதியில் அவர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் ரூபாய் 9,212,498 வழங்கப்பட்டுள்ளது.
(உ) சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி கடன் திட்ட ஒப்பந்தம் கட்டம் II – 2016 மார்ச் 29 (SEPI) i. பந்தி 3.2 இல் பிரிவு (ஊ) ii. ஒப்பந்தத்தின் பந்தி 2.2 இல் பிரிவு (ஆ)	சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி கடன் திட்ட ஒப்பந்தம் கட்டம் II தொடர்பிலான கணக்குகளினை, 2 வது கணக்கியல் வருடம் முடிந்து மூன்று மாதங்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல் வேண்டும் என்ற பணியானது மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையில் அப்பணியானது செய்யப்படவில்லை. கடன் கோரிக்கை தொடர்பிலான சகல விண்ணப்பங்களும் அமைச்சின் ஊடாக சமர்பிக்கப்படல் வேண்டும் என கோரப்பட்டிருந்த போதிலும் கடன் வழங்கும் வங்கிகள் 2016 இல் இருந்து 2021 வரையில் கடன் பெறுனர்களினை தாமாகவே தெரிவு செய்தமை இவ்விதிக்கு முரணாக அமைந்தது, இதற்கமைவுற பதிவு செய்யப்பட்ட 1295 பயனாளிகளில் 1109 பேர்களுக்கு மேற்கூறப்பட்ட முறையில் ரூபாய் 491,134,875 பெறுமதியான கடன் வழங்கப்பட்டமை கணக்கைவின் போது அவதானிக்கப்பட்டதோடு கணக்கைவின் போதும் இதே முறை தொடரப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவை அவதானிக்கப்பட்டன

(அ) 1990 ஆம் ஆண்டின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டம்.எண்.20 இன் நிபந்தனைகளுக்கு அமைவுற, தேசிய தொழிற்கல்வித் தகுதி (NVQ) நிலைப் கற்கைகளினை நடத்துவதாயின் அவை பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் கற்றல் மற்றும் பயிற்சி உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகரிக்கப்பட்ட உயர் தரங்களுக்கு இணங்கினால், அத்தகைய கற்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படுவது அவசியமாகும். எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஜனவரி 18 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட 343 விண்ணப்பங்கள், இந்த அறிக்கையின் திகதி வரை அங்கீகாரம் பெறவில்லை மற்றும் அத்தகைய பாடநெறிகளின் தரத்தை அதிகரிப்பதற்கா தனியார் துறை நிறுவனங்களால் நடத்தப்படும் பாடநெறிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதில் சரியான கவனம் செலுத்தப்படவில்லை.

(ஆ) i. சுயவேலைவாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி கடன் திட்டமானது (SEPI) தொழில் பயிற்சி பெற்ற இளைஞர்களின் பொருளாதார நிலைக்கு வலுவூட்டலுக்கு உதவுதல் மற்றும் திறமையான இளைஞர் படைகளுக்கு கைகொடுத்தல் ஆகிய நோக்கில் இரண்டு கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்ட கடன் திட்டமாகும். இந்த கடன் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் ரூபாய். 76,241,000 கடன் தொகையானது 170 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டில் எதுவித கடன் விண்ணப்பங்களும் பதிவு செய்யப்படவில்லை, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இந்தக் கடன்களை வழங்குவதற்காக ரூ.90 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது. இலக்கிடப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையைக் கண்டறிய இயலாமை மற்றும் முறையான நிதித் திட்டம் இல்லாத காரணத்தால், ஒதுக்கப்பட்ட தொகையில் 89% னை அதாவது ரூபாய் .80 மில்லியனை வேறு ஒரு வாக்குப் கணக்கிற்கு மாற்றுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் கடன் பெறுபவர்கள் என்ற ரீதியில் மூன்று பேர் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்ததோடு இவர்களுக்கு தலா 05 இலட்சம் என்ற அடிப்படையில் மொத்தம் 1.5 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

ii. கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடனானது, சுயதொழில் வியாபார முயற்சி ஒன்றினை தொடங்குதல் நிமித்தம் அடிப்படை உபகரணத்தினை கொள்வனவு செய்வதற்கு மற்றும் மூலப்பொருட்களினை கொள்வனவு செய்வதற்கு பெற்றுக்கொள்ளலாம் என இருந்த போதிலும் கடனை பெற்றவர்களில் கிட்டத்தட்ட 38% மானோர் தமது நடப்பு வியாபாரத்தினை விஸ்தரிக்க கடனை பெற்றுள்ள அதேவேளையில் 14% மானோர் எது வித நோக்கமும் இன்றி அல்லது நடப்பு வியாபாரத்தினை விஸ்தரிக்கவே கடனை பெற்றுள்ளார்கள். அமைச்சின் தலையீடு மற்றும் பின்தொடர்தல் ஆகியவை முறையாக மேற்பார்வை செய்யப்படாததால் இந்த கடனை வழங்க நீண்ட காலம் எடுத்துக் கொண்டமை, சுயவேலைவாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி கடன் திட்டம் (SEPI) குறித்து வங்கிகள் உரிய கவனம் செலுத்தாததாலும், அவற்றின் விழிப்புணர்வு இல்லாததாலும் மற்றும் கடன் திட்டத்தை விட அதிகமான வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கப்படல் போன்ற

காரணங்களினால் இந்தக் கடன் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.

3.1.1 <u>எதிர்பார்த்த அளவு நிறைவு பெறாமை</u>

(அ) மீளாய்வுக்குட்பட்ட வருட காலப்பகுதியில் 05 நகர் பல்கலைக்கழகங்களினை தாபிக்கும் நிமித்தம் ரூபாய் 100 மில்லியன் வழங்கப்பட்ட போதிலும் 2021 ஜனவரி மாதம் 04 ஆம் திகதியினையும் 2209/14 என்ற இலக்கத்தினையும் கொண்ட வர்த்தமானியில் இனம் காட்டப்பட்டுள்ள விசேட முன்னுரிமைகள் என்பதன் கீழ் தரப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவுற, மீளாய்வுக்குட்பட்ட வருட காலப்பகுதியின் இறுதி வரையிலும் 03 பல்கலைக்கழகங்கள் தொடர்பில் மாத்திரமே அடிப்படை நிர்மாணப்பணிகள் மற்றும் நிலக்கொள்வனவு பணிகள் தொடங்கப்பட்டிருந்தது. இது மொத்த நிதியில் 6.11% ஆகும்.

(ஆ) இளைஞர் சமூகத்தினருக்கான தொழிற்பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் தொழிற்கல்வியை தொடரும் மாணவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் நோக்கில், தொழிற்கல்வி பயிலும் 55,000 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூபாய் 500 மில்லியன் நிதியுதவித் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் 26,730 மாணவர்களுக்கு மட்டுமே உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முன்னேற்றமானது 28% ஆக உள்ளது.

3.1. 2 <u>கருத்திட்ட செயலாக்கத்தில் தாமதம்</u>

கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவை அவதானிக்கப்பட்டன

(அ) 2017 ஜூன் 20 ஆம் திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவுற, பிரிவு அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் ரூபாய் 434 மில்லியன் செலவில் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணிய பல்கலைக்கழக கல்லூரியினை தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பில் முதல் கட்ட செலவினமாக ரூபாய் 8,931,683 ஆனது பல்கலைக்கழக பதவி நிலை உத்தியோகத்தருக்கான விடுதி கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட போதும், இந்த செலவினமானது, உற்பத்தி ரீதியாக பயனற்ற செலவினமாக கருதப்படுவதற்கு காரணம், இக்கல்லூரி தாபிக்கப்படுவதற்கு பிரிவு அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டிற்கு எதுவித நிதியும் ஒதுக்கப்படாததால் ஆகும்.

(ஆ) 2017 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி, கிளிநொச்சியில் உள்ள சிலோன் ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் 400 மாணவர்கள் தங்கும் வகையில் மொத்தம் 300 மில்லியன் ரூபா செலவில் மாணவர் விடுதியை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் உத்தேச திட்டத்திற்கான ஆலோசனைக் கட்டணமாக ரூ.6,028,015 செலவிடப்பட்டிருந்தாலும், வடிவமைப்பு, ஒப்பந்தம் மற்றும் கட்டுமான முகாமைத்துவம். கட்டுமானத்திற்குப் பின்னான மேற்பார்வை ஆகியவற்றிற்கான ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதில் தாமதம் மற்றும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திறன் துறை அபிவிருத்தி பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் காரணமாக கொள்முதல் பணிகளில் தாமதம் போன்ற பல காரணங்களால் திட்டப் பணிகள் தாமதமாகின.

(இ) அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2017 ஆம் ஆண்டில் ரூபாய் 80 மில்லியன் செலவில் சமூக கண்டுபிடிப்பு ஆய்வகத்தை நிறுவுவதற்கான முன்மொழிவு செய்யப்பட்டது, இது 2018 இல் தொடங்கி அதே ஆண்டின் இறுதியில் பூரணப்படுத்த திட்டமிடப்பட்டது. இலங்கையில், அமைச்சின் செயலாளர் மற்றும் / ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) பணிப்பாளர் ஆகியோரினது ஒப்புதல் பெறப்பட்டு கையொப்பமும் பெற்றுக்கொள்ளப்பட்டது.. 2017ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் செயல்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய். 35 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள் 2020 டிசம்பர் 31ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டன. மேலும் இது தொடர்பான எதிர்காலப் பணிகள் குறித்து நிதி அமைச்சகத்திடம் இருந்து அறிவுறுத்தல்கள் கோரப்பட்டிருந்தாலும், ஏற்கனவே செலவழிக்கப்பட்ட ரூபாய் 35 மில்லியன் பணத் தொகையானது மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு இறுதிக்குள் நோக்குமிடத்து ஒரு பயனற்ற செலவாகிவிட்டது.

3.1.3 நிதி ஒதுக்கீடு செய்தும் எந்த முன்னேற்றமும் அடையாத கருத் திட்டங்கள்

(அ) I 2016 பெப்ரவரி மாதம் தேசிய விஞ்ஞான நிலையத்தை அமைப்பதற்கு வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு, அதற்கு தேவையான காணியை கையகப்படுத்துவதற்காக ரூபா 280 மில்லியன் செலுத்தப்பட்டது. இவ்வாறு பணம் செலுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் கூட காணியின் உரிமையை அமைச்சுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 2,819,711,538 மதிப்பீட்டில் 24 மாதங்களுக்குள் மையத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்யும் படி 07 சந்தர்ப்பங்களில் விளக்க இலக்குகளின் கீழ் முன்மொழியப்பட்ட போதிலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும், மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

II 2020 மார்ச் 05 ஆம் திகதியிட்ட ஒரு கடிதத்தின் மூலம் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான மதிப்பீடு ரூபாய் 7,837,061 என குறிப்பிட்டு ஒரு கடிதத்தினை மேலதிக செயலாளருக்கு (ஆராய்ச்சி) அனுப்பி இருந்தது. இக்கடிதத்தினை பணிப்பாளரிடம் (விஞ்ஞானம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) சமர்ப்பிப்பதில் 03 மாதங்கள் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக, தொடர்புடைய பணிகளை நிறைவேற்ற இடைக்காலக் கணக்கின் கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதனால் 2022 ஜனவரி மாதம் வரையில் வேலி கட்டும் பணியானது தோல்வியடைந்ததுள்ளது.

(ஆ) விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கம் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் நோக்குடன் செயற்படும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவைப் பொறுத்தவரையில் 06 விசேட முன்னுரிமைத் துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டில் அடையாளம் காணப்பட்ட 05 திட்டங்களுக்கு ரூபாய் .80

மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக ரூபாய் 7.68 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இது திட்டமிடப்பட்ட தொகையில் 9.6% ஆகும்.

3.2 <u>பொருளியல் வாய்ப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்</u>

2018 மே 22 ஆம் திகதி விபத்திற்குட்பட்ட மோட்டார் வண்டியானது திருத்தப்பட்டு 2018 செப்டெம்பர் 27 ஆம் திகதி அமைச்சுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், சாரதியின் வேண்டுகோளின் பேரில் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி மீண்டும் கரேஜிற்கு கொண்டு செல்லப்பட்டு ரூபாய் 51,000 செலவில் மீண்டும் திருத்தப்பட்டு 2021 ஜனவரி 12 ஆம் திகதியன்று மீண்டும் அமைச்சிற்கு கொண்டுவரப்பட்டது. அதன்படி, மேற்கூறிய வாகனம் ஒரு சிறிய திருத்தத்தின் நிமித்தம் கிட்டத்தட்ட 27 மாதங்களாக ஒரு கேரேஜில் எதுவித செயற்பாடும் இன்றி இருந்தது.

W.M.P.A பொன்சேகா

சிரேட்ட உதவி கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வாளர் நாயகத்திற்காக

பிரதிகள் செயலாளர் – கல்வி அமைச்சு (திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு)

அத்தியாயம் 04

செயலாற்றுகை சுட்டிகள்

4.1.1. செயலாற்றுகை சுட்டிகள் (செயல் திட்டத்தினை அடிப்படையாக கொண்டது)

குறித்துரைக்கப்பட்ட சுட்டிகள்	உண்மையான விளைவளவானது எதிர்பார்த்த விளைவளவின் நூற்று வீதமாக தரப்பட்டுள்ளது		
	100%-90%	75%-89%	50%-74%
தொழிற்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாணவர்களின் சேர்க்கை			√
தொழிற்கல்வி துறைக்கான நிதி முதலீடு		√	
பாடத்திட்ட விருத்தி	√		
தேசியத் திறன் தகைமை	√		
நடைமுறைப்படுத்தும் செயல் திட்டத்தின் வளர்ச்சி		√	
வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் எண்ணிக்கை	√		
நிறுவப்பட்ட கூட்டு ஆராய்ச்சிகள்/ஆராய்ச்சி - தொழிற்துறை இணைப்புகளின் எண்ணிக்கை			√
பெற்றுக்கொள்ளப்பட்ட அக மற்றும் சர்வதேச காப்புரிமைகளின் எண்ணிக்கை			√
விஞ்ஞானத்தினை பிரபல்யப்படுத்த முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	√		
வினைமுயலுமையினை மையமாக கொண்டு பிரிசுரிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள்			√
உள்நாட்டில்/சர்வதேச அளவில் கையெழுத்திடப்பட்ட தொழினுட்ப பரிமாற்ற ஒப்பந்தங்களின் எண்ணிக்கை			√
ஆராய்ச்சி தயாரிப்புகள் உள்நாட்டில்/சர்வதேச அளவில் வணிகமயமாக்கப்பட்டுள்ளன	√		
வணிகமயமாக்கலுக்காக நிதி ரீதியாக ஆதரிக்கப்படும் கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை			√
விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட விஞ்ஞானம் தொடர்பான வெளியீடுகளின் எண்ணிக்கை	√		
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோருக்கு மாற்றப்பட்ட தொழினுட்பங்களின் எண்ணிக்கை	√		

அத்தியாயம் 05

நிலையான அபிவிருத்தி இலக்குகளினை சாதிப்பதற்கான செயலாற்றுகை (SDG)

5.1 ஒவ்வொரு துறைக்கும் உரித்ததாய் அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளைக் குறிப்பிடவும்

இலக்குகள்	குறிக்கோள்கள்	சாதிப்பதற்கான சுட்டிகள்	சாதனையின் வளர்ச்சி %		
			0-49	**50-74**	**75-100**
4.அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் சமமான மற்றும் தரமான கல்வி கிடைக்கப்பெறுதலானது உறுதி செய்யப்படுவதோடு கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்	4.3 2030 ஆம் ஆண்டுக்குள், அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு பல்கலைக்கழகம் அடங்கலாக தொழினுட்ப, தொழிற்கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியினை நியாயமான கட்டணத்திலும் மற்றும் தரமானதாகவும் சமனான அணுகலில் பெற்றுக்கொள்ள்ளப்படுதலானது உறுதிசெய்யப்படல்	4.3. பாலின அடிப்படையில் முந்தைய 12 மாதங்களில் முறையான மற்றும் முறைசாரா கல்வி மற்றும் பயிற்சியில் இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களின் பங்கேற்பு விகிதம் • பெண்களின் எண்ணிக்கை % • ஆண்களின் எண்ணிக்கை % • ஆட் சேர்க்கை	√	√ √	
	4.4 2030 ஆம் ஆண்டுக்குள், வேலைவாய்ப்பு, பண்பான வேலைகள் மற்றும் தொழில்முயலுமை ஆகியவற்றுக்கான தொழினுட்ப மற்றும் தொழில்சார் திறன்கள் உட்பட தொடர்புடைய திறன்களைக் கொண்ட இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரித்தல்	4.4.1 திறன் வகைகளின் அடிப்படையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப (ICT) திறன்கள் கொண்ட இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களது விகிதம்.			√

	4.5 2030 ஆம் ஆண்டிற்குள் கல்வியில் பாலின வேறுபாடுகளை அகற்றி, மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் உட்பட, அனைவருக்கும் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான அனைத்து நிலைகளிலும் அணுகுவதற்கு இயலும் என்பதனை உறுதி செய்தல்	4.5.1 இந்தப் பட்டியலில் உள்ள அனைத்துக் கல்விக் குறிகாட்டிகளுக்கான சமநிலை குறியீடுகள் (பெண்கள்/ஆண்கள், கிராமப்புறம்/நகர்ப்புறம், கீழ்நிலை/உயர்ந்த செல்வம் மற்றும் இயலாமை நிலை பழங்குடியின மக்கள் மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற இதர பிற). • வலது குறைந்தோர் சதவீதம் • உதவித்தொகை பயனாளிகளின் சதவீதம்	√	√	
4.அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் சமமான மற்றும் தரமான கல்வி கிடைக்கப் பெறுதலானது உறுதி செய்யப்படுவதோடு கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்	4.3 2030 ஆம் ஆண்டுக்குள், அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு பல்கலைக்கழகம் அடங்கலாக தொழினுட்ப, தொழிற்கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியினை நியாயமான கட்டணத்திலும் மற்றும் தரமானதாகவும் சமனான அணுகலில் பெற்றுக்கொள்ள்ளப்படுதலானது உறுதிசெய்யப்படல்	4.3.1 முறையான மற்றும் முறைசாரா கல்வி மற்றும் பயிற்சியில் இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்கள் பங்கேற்றல்			√
8. பண்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி	8.2 பொருளாதார உற்பத்தித்திறனுக்காக பல்வகைப்படுத்துதல், புதுக்கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவற்றின் விருத்தி	8.2.1 உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஊழியர் ஒருவரினது வருடாந்திர வளர்ச்சி விகிதம்		√	

9. உறுதியான உள்கட்டமைப்பை உருவாக்குதல், நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதிது கண்பிடிக்கும் திறனை ஊக்குவித்தல்	9.5 அறிவியல் ஆராய்ச்சியினையும் அத்துடன் தொழில்துறைத் துறைகளின் தொழினுட்ப திறன்களை அனைத்து நாடுகளிலும், குறிப்பாக வளரும் நாடுகளில் மேம்படுத்துதல், 2030 ஆம் ஆண்டளவில், புது கண்டுபிடிப்புக்களினை ஊக்குவிப்பதோடு அதற்கு நிகராக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழிலாளர்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிப்பதுடன் அரச மற்றும் தனியார் துறை ஆராய்ச்சிகளினை ஊக்கப்படுத்தல்	9.5.1 ‘‘மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்கள்’’			√
	9.b. ஏனைய செயற்பாடுகளுடன் தொழில்துறை பல்வகைப்படுத்தல் மற்றும் பொருட்களின் மதிப்பு கூட்டல் ஆகியவற்றிற்கு சாதகமான கொள்கை சூழலை உறுதி செய்தல் அடங்கலாக வளரும் நாடுகளில் உள்நாட்டு தொழினுட்ப மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் புது கண்டுபிடிப்புகளினை ஆதரித்தல்,	9.b.1 நடுத்தர மற்றும் உயர் தொழில்நுட்பத் தொழில்துறை மதிப்பின் விகிதமானது மொத்த மதிப்பில் சேர்க்கப்பட்டது”			√
17. இலக்குகளுக்கான கூட்டு நடவடிக்கைகள்	17.6 விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் கண்டுபிப்புகளை அணுகுவதற்கான அறிவுப் பகிர்வு மற்றும் ஒத்துழைப்பு	17.6.1 வேகத்தின் அடிப்படையில் 100 குடிமக்களுக்கு நிலையான இணைய வசதிகள்		√	

5.2. நிலையான வளர்ச்சி இலக்குகளின் ஊடாக அடையப்பெற்ற சாதனைகள் மற்றும் சவால்கள்

சாதனைகள்

- தொழிற்துறையின் தேவையின் அடிப்படையில் அதிகளவில் ஆராய்ச்சிகளினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் ஆராய்ச்சி நிறுவனங்களால் சுமார் 101 ஆராய்ச்சித் திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டதோடு 48 காப்புரிமைகள் சமர்பிக்கப்பட்டன.

- 2021 ஆம் ஆண்டில் சுமார் 136 புதிய கண்டுபிடிப்புகளுக்கு குறிப்பாக கொவிட் சுகாதாரப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய கண்டுபிடிப்புக்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டன.

சவால்கள்

- கடந்த பல ஆண்டுகளாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முதலீடுகளுக்கு குறைந்த அளவிலேயே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- அரசு நிறுவனங்கள், ஒழுங்கு விதிகளினை நெறிப்படுத்துகின்றவர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை / வணிகக் குழுக்களைக் உள்ளடக்கிய வலுவான வலையமைப்பு இல்லாமை

- திறமை உடைய மனித வளங்கள் போதிய அளவில் இல்லாமை

- ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களுக்கு உகந்த சுற்றுச்சூழல் இல்லாமை

- அரசாங்கத்தின் ஊதிய திட்டத்திற்கு அமைவுற, ஆராய்ச்சி நிறுவனங்களில் நிபுணர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் உள்ள சிக்கல்கள்

- விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்ற புத்திஜீவிகளின் வெளியேற்றம்.

அத்தியாயம் 06
மனித வளம் பற்றிய விபரக்குறிப்பு

6.1. தொழில் நிலைப்பிரிவு முகாமைத்துவம்

	அனுமதிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவு முகாமைத்துவம்	நடப்பிலுள்ள தொழில் நிலைப்பிரிவு முகாமைத்துவம்	வெற்றிடங்கள்/ (மேலதிகம்)
சிரேட்ட	53	40	13
மூன்றாம் நிலை	06	04	02
இடைநிலை	532	463	69
ஆரம்ப நிலை	78	63	15

6.2. மனித வள விருத்தி

நிகழ்ச்சி திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர் எண்ணிக்கை	நிகழ்ச்சி திட்டத்தின் கால வரையறை	மொத்த முதலீடு (ரூ)		நிகழ்ச்சி திட்டத்தின் தன்மை	விளைவளவு / பெற்ற அறிவு
			உள்ளூர்	வெளிநாடு		
தொழில் வழிகாட்டுதலில் தேசிய டிப்ளோமா (இலங்கை மன்றக் கல்லூரி) தொழில் வழிகாட்டுதலில் தேசிய டிப்ளோமா (இலங்கை மன்றக் கல்லூரி)	11	2021.01.01 - 2021.12.31 (12 மாதங்கள்) வார இறுதி வகுப்புக்கள்	ரூபாய் 660,000.00		உள்ளூர்	அமைச்சின் கள அடிப்படையிலான கடமைகளில் ஈடுபட்டுள்ள திறன் மேம்பாட்டு உதவியாளர்களின் தொழில் வழிகாட்டுதலுடன் மற்றும் தொடர்புடைய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மை மற்றும் அவர்களின் செயற்றிறன் ஆகியவற்றை மேம்படுத்துதல்.
உளவியல் உசாவுகையில் டிப்ளோமா கற்கை (ருகுணு பல்கலைக்கழகம்)	03	2021.01.01 - 2021.12.31 (12 மாதங்கள்) வார இறுதி	ரூபாய். 180,000.00		உள்ளூர்	அமைச்சின் கள அடிப்படையிலான கடமைகளில் ஈடுபட்டுள்ள திறன் மேம்பாட்டு

		வகுப்புக்கள்				உதவியாளர்களின் தொழில் வழிகாட்டுதல் மற்றும் உசாவுகையுடன் மற்றும் அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு தொடர்புடைய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்துதல்.
ஆலோசனையில் டிப்ளோமா கற்கை (களனி பல்கலைக்கழகம்)	03	2021.01.01 - 2021.12.31 (12 மாதங்கள்) வார இறுதி வகுப்புக்கள்	ரூபாய் 189,750.00		உள்ளூர்	அமைச்சின் கள அடிப்படையிலான கடமைகளில் ஈடுபட்டுள்ள திறன் மேம்பாட்டு உதவியாளர்களின் தொழில் வழிகாட்டுதல் மற்றும் உசாவுகையுடன் மற்றும் அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு தொடர்புடைய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்துதல்.
ஆலோசனையில் டிப்ளோமா கற்கை ((ருகுணு பல்கலைக்கழகம்)	01	2021.01.01 - 2021.12.31 (12 மாதங்கள்) வார இறுதி வகுப்புக்கள்	ரூபாய் 60000.00		உள்ளூர்	அமைச்சின் கள அடிப்படையிலான கடமைகளில் ஈடுபட்டுள்ள திறன் மேம்பாட்டு உதவியாளர்களின் தொழில் வழிகாட்டுதல் மற்றும் உசாவுகையுடன் மற்றும் அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு தொடர்புடைய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்துதல்.
தொழில் வழிகாட்டுதலில்	02	2021.01.01 - 2021.12.31	ரூபாய். 120,000.00		உள்ளூர்	அமைச்சின் கள அடிப்படையிலான

தேசிய டிப்ளோமா (இலங்கை மன்றக் கல்லூரி)						கடமைகளில் ஈடுபட்டுள்ள திறன் மேம்பாட்டு உதவியாளர்களின் தொழில் வழிகாட்டுதல் மற்றும் உசாவுகையுடன் மற்றும் அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு தொடர்புடைய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்துதல்.
கட்டுமான செயற்றிட்ட முகாமைத்துவத்தில் முது நிலை விஞ்ஞான கற்கை (மொரட்டுவ பல்கலைக்கழகம்)	01	2021.02.01 - 2021. 12.31 கிழமை நாள் – வெள்ளிக் கிழமை	ரூபாய் 400,000.00		உள்ளூர்	தொழில்சார் செயற்றிறன் விருத்தி
கோப்புக்கள் மற்றும் முறை சார் கடிதங்களினை தயாரித்தல்.	83	2021.12.22 (01 நாள்)	ரூபாய் 7540.00		உள்ளூர்	அமைச்சினை சார்ந்த அலுவலர்களின் செயற்றிறன் விருத்தி
நிதியியல் பொருளாதாரத்தில் முது நிலை கற்கை – 2021 (கொழும்பு பல்கலைக்கழகம்)	01	2021 - 2022	ரூபாய். 192,000.00		உள்ளூர்	தொழில்சார் செயற்றிறன் விருத்தி
மனித வள முகாமைத்துவத்தில் முது நிலை கற்கை (MHRM) (கொழும்பு பல்கலைக்கழகம்)	01	2021 - 2022	ரூபாய். 310,000.00		உள்ளூர்	தொழில்சார் செயற்றிறன் விருத்தி
அரச பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவத்தில் உயர் சான்றிதல் கற்கை நெறி (தொலை கற்கை நிறுவனம்) (DLC)	01	2021.09.29 - 2021.12.15	ரூபாய். 30000.00		உள்ளூர்	தொழில்சார் செயற்றிறன் விருத்தி

மனித வள அபிவிருத்தி புலமை பாரிஸில் திட்டத்திற்கான நிகழ்ச்சித் திட்டம் (JDS) மேஜி பல்கலைக்கழகம் டோக்யோ ஜப்பான்	01	2021.09.20 - 2023.10.31 (02 வருடம்)		அமெரிக்க டொலர் 600 ஸ்டேலிங் பவுன் 75		தொழில்சார் செயற்றிறன் விருத்தி

அத்தியாயம் 07
இணக்க அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கம் அற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கம் அற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்	பொருத்தமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது		
1.5	விசேட முற்பண கணக்கு	பொருத்தமற்றது		
1.6	ஏனையவை			
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுத் திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		

2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.9	இழப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.10	பொறுப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	.	
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நிதி ஒழுங்குவிதி.135)**	இணக்கமானது		
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன.	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது.	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல.171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		
4.3	அந்தந்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் படி ஒப்புதல்			
4.4	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		

4.5	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி. (NBD) திணைகளத்தில் உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
4.6	வருடாந்த காசுப்ப பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
4.7	காலாண்டு அறிக்கைகளினை உரிய திகதிக்குள் திறைசேரிக்கு சமர்பித்தல்	இணக்கமானது		
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிக்கப்பட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	**நிதி ஒழுங்குவிதி 134(2) DMA/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்**	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40 (4)இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல்.	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			

7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்குக் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	பொருத்தமற்றது	கொவிட் 19 தொற்றின் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் 2 மாத்திரமே இடம் பெற்றது	ஆகக் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடத்தல் வேண்டும்
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ அறிக்கை இல.01/2017 பந்தி 7 இற்கு அமைய சொத்துப் பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டு ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.	இணக்கமானது		
8.2	ஆதன முகாமைத்துவ அறிக்கை இல.01/2017 சொத்துப் பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது	.	
8.5	நிதி ஒழுங்குவிதி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**	இணக்கமானது		
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		

9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	பொருத்தமற்றது	குழு நியமிக்கப்பட்ட போதிலும் கொவிட் 19 தொற்று காரணமாக நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை	ஓர் உறுப்பினர் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து, குழுவிற்கு புதிய உறுப்பினரை நியமிக்க திட்டமிடப் பட்டுள்ளது
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நிதி ஒழுங்குவிதி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	பொருத்தமற்றது	கொவிட் தொற்று காரணமாக எரிபொருள் சோதனை செய்யப் படவில்லை	மார்ச் மாதத்தில் முதல் வாரத்தில் ஒரு குழுவை நியமித்து எரிபொருள் சோதனை நடாத்த திட்டமிடப் பட்டுள்ளது.
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணக்கமானது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**	இணக்கமானது		
10.1	உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	பொருத்தமற்றது		
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைளைத் தீர்த்தல்.	இணக்கமானது		
11	நிதி **ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		

11.2	நிதி ஒழுங்குவிதி 94 (1)இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது		
12	**அரச அலுவலகர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வறையறைகளுக்குள் இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்.	இணக்கமானது		
13	**பொது வைப்புக் கணக்கு**	இணக்கமானது		
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நிதி ஒழுங்குவிதி 571 பிரகாரம் நடடிவக்கை எடுத்தல்.	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
14	**கட்டு நிதிய கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	இணக்கமானது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான நிகழ்வுகளுக்கான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி. 371 இனால் அநுமதிக்கப்பட்டதற்கு அமைவுற நிகழ்வுகளுக்கான இடைக்கால வழங்கப்படல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டன. வேண்டும்.	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	வருமான மீளளிப்புக்கள் ஓழங்கு விதிகளின் நியதிகளுக்கு அமைவுற செலுத்தப்படல்.	பொருத்தமற்றது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டது.	இணக்கமானது பொருத்தமற்றது		
15.3	நிதி ஒழுங்குவிதி 176 இன் படி நிலுவைத் தொகையைக் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது	இணக்கமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**	இணக்கமானது		

16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள் உள்ள அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது	இணக்கமானது		
16.2	சகல அலுவலர்களுக்கும் அவர்களது கடமை பட்டியல் எழுத்தில் வழங்கப்பட்டது	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிடப்பட்ட MSD சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படல் மற்றும் தகவல் பதிவேடு பேணப்படல்	இணக்கமானது		
1 7.2	நிறுவனத்தைப் பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு இணையதளம் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன, மேலும் இந்த இணையதளம் மூலம் நிருவனத்திற்கு எதிரான பாராட்டு / குற்றச்சாட்டைப் பொதுமக்கள் வழங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.	இணக்கமானது	.	
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
18	**பிரஜைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (i) இன் படி பிரஜைகள் பட்டயம் /பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரஜைகள் பட்டயம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்தவும் அதைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		

19.2	ஒவ்வொரு ஊழியர்களுக்கும் குறைந்த பட்சம் ஆண்டிற்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் பயிற்சி கிடைப்பதனை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுப் பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்.	இணக்கமானது		